1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 5-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு மாசி மாதம் 1-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## பாத்திமா மாதாவின் புதுமைகள்

(C. S. நாயகம்., ஸ்றேஷன்மாஸ்றர், ரிபோங், சிங்கப்பூர்.)

எமது பரலோக பூலோக அரசியாகிய பாத்திமா நாயகியின் சிங்கப்பூர், மலாயாத் தரிசனைவிஷயமாய் இதுவரை நான் கண்டதையும், கேட்டதையும் மாதாபக்தர்கள் அறிந்து மகிழ்ச்சி எய்துமாறு மிகுந்த ஆர்வத்துடன் "பாதுகாவலன்" மூலமாக வெளியிடலானேன். இப்போதோ தமது தரிசனையின் ஓர் ஞாபகார்த்தமாக— ஓர்சன்மானமாக மாதா செய்துவிட்டுப் போயிருக்கும் இரு நவமான புதுமைகளை—இங்கு பிரஸ்தாபமாக அறியப்பட்டுள்ள இரு அற்புதங்களைச் சகலரும் அறிய வேண்டுமென்னும் ஆவல்மேலீட்டினாலும், நவமான ஆச்சரியங்கள் புரியும் எங்கள் அன்பு நிறைந்த மாதாவின் புகழ் காற்றுப்போல் திக்கெட்டும் பரவ வேண்டுமென்னும் தாகமேலீட்டினாலும் இங்கு அறியத்தர முன்வந்தேன். இவ்விதம் நான் அறியத்தர மனம் ஏவுகையில் எனது உள்ளத்தில் — எனது இருதய தடாகத்தில் அலைமோதிக் கரைபுரண்டோடும் ஆனந்தப்பிரவாக வீச்சின் வலிமையை நான் உள்ளன்பு கொண்டு இருகரமும் குவித்து வணங்கிப் பூசித்துவரும் அந்தப் பரமதாய்மாத்திரமே அறிவார்.

நிற்க, இப்புதுமைகளைப் பற்றிய விபரங்களை வெளியிடும் இச்சந்தர்ப்பத்திலே புதுமைகளின் தாற்பரியத்தைப்பற்றி இரண்டொருவார்த்தைகள் சொல்வது உசிதமாகுமென நம்புகிறேன். நவநாகரீகம் படைத்த இக்காலத்திலே விஞ்ஞான கலைகளின் உதவிகொண்டு மனிதன் தனது ஆராய்ச்சிகளால் வியப்புக்கும், திகைப்புக்குமுரிய எத்தனையோ நூதனங்களைக் கண்டுபிடிக்கிறான். ஆயின் இவைகள் அனைத்தும் பரலோகத்திலிருந்துவரும் ஓர் அற்ப புதுமைக்குமுன்பாகக் கண்கட்டு வித்தைகளுக்குச் சமானமானவையேயன்றி வேறல்ல. ஏனெனில், மனிதனால் கண்டுபிடிக்கப்படும் எந்தஒருநூதனமும் மனித சுபாவத்துள் அடங்கியதாகும். ஆனால், புதுமையோ சுபாவத்திற்குமேலானதாகும். அது தேவஞானம் படைத்த 'வரம்' பெற்றவர்களாலேயன்றி உலக 'ஞானம்' படைத்த எந்தநிபுணனாலும் முடியும் ஓர்காரியமன்று. ஏனெனில், "சர்வேசுரன் ஒருவனோடு இருந்தாலொழிய எவனும் எந்த ஒரு அற்புதத்தையும் செய்யமாட்டான்" என்னும் வேதவாககியம் இதற்கு ஓர் சான்றாகும். 'புதுமை' என்பது சர்வேசுரனுடைய 'முத்திரை.' கிறீஸ்துநாதர் யூதர்களை நோக்கி: "நான் தேவகுமாரனென்று நீங்கள் என்னை நம்பாதேபோனால் நான்செய்யும் புதுமைகளைக்கண்டாகிலும் என்னை விசுவசியுங்கள்" என்று சொன்னார். இன்னும் "என்னில் விசுவாசமுள்ளவர்கள் என்னிலும் பார்க்க எவ்வளவோ மேலான புதுமைகளைச் செய்வார்கள்" என்று வாக்களித்தார். அங்ஙனமாகத் தேவகுமாரனாகிய யேசுக்கிறீஸ்துநாதரின் திருத்தாயாரும், பரலோக பூலோக இராசேஸ்வரியுமான எங்கள் அமலநாயகியின் புதுமைகளைப் பற்றி வர்ணிக்கவும்வேண்டுமா?

நிற்க, "புதுமை" என்றால் அது எவர்க்குமே ஆச்சரியந்தான். அதைக்காண ஆசைதான். "உன் விசுவாசப்படி உனககாகக்கடவது. நம்பிக்கையோ ஒருவனை வெட்கிப் போகவிடாது" என்பது தேவவாக்குகளாம. பாத்திமா தாயார் இக்காட்டிற்கு விஜயம் செய்தநாட்களிலே "நம்மைச் சூழவிருக்கும் பல சாதிசமயத்தவர்களும்கண்டு அதிசயிக்கக் கூடியதாய் ஏதாகிலும் ஓர் புதுமை, மாதா செய்தாவென்றாலோ" என்று சிலபக்தர்கள் தங்கள் உள்ளக்கிடக்கையை எனக்குத் தெரிவித்ததுண்டு. ஓ! அப்படிஒன்று நடந்தால் பிறகுஅதைப்பற்றிப் பேசுவானேன்? மாதாவின் புகழ்ச்சியை மேன்மேலும் பாடிப் புகழந்து கொண்டிருப்பேன் அன்றோ! பொன்னைப் புடமிட்டவாறாய் மாதாவில் நான் கொண்டுள்ள பத்தி பின்னரும் அதிகரித்துச் சுடர்விட்டுப் பிரகாசிப்பதாகும் அன்றோ!

நல்லது, இனி நடந்தபுதுமைகள்தான் என்ன? புத்தசமயத்தைச்சேர்ந்த 10 வயசுடைய ஓர் சீனப்பையன் பிறப்பிலிருந்து நடக்கமுடியாமல் சப்பாணியாய் இருந்தான். நல்ல செல்வவந்தர்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## நான் கவிஞனாய் இருந்தால்!

[வண. பிரான்சீஸ் மறயில்ஸ் S. J. சுவாமிகள்.]

நான் புலவனாயிருக்க விரும்புவதற்கு முதற்காரணம், அதற்குள்ள மதிப்புத்தான். எப்படியிருந்தாலும் உரைநடை ஆசிரியர்களைவிடப் புலவர்கள் ஒருபடி உயர்வுதானே. உரைநடை ஆசிரியர்கள் என்பது, புலவரைத்தவிர மற்றெல்லோரையும்—கட்டுரையாளர், சிறுகதை எழுதுபவர், பத்திரிகாசிரியர்கள், சரித்திர, பூகோள, பூதபௌதீகநூல் வரைபவர், அதாவது வசனநடையில் தம்கருத்துகளை வெளியிடுபவர். —முற்காலத்தில் இவ்வகையாய்ப் பிரிக்கமுடியாது. அப்போது எல்லோரும் புலவராயில்லாது போயினும், எல்லோரும் செய்யுள்எழுதப் பழகியிருந்தனர். இலக்கணம் வரைந்தாலும் செய்யுளில்தான், மருந்துபற்றிஎழுதினாலும் செய்யுளில்தான், மாந்திரீகத்தைப்பற்றி எழுதினாலும் செய்யுளில்தான். சீரையும் அசையையும் மோனையையும் எதுகையையும் யாரும் எதற்கும் கையாடலாம், கையாடவேண்டியது. (பின்னால் இலக்கணத்திற்கும் வைத்தியநூலுக்கும் உரை எழுத அநேகர் காத்துக்கொண்டிருந்தனர்.) ஆனால், அவர்கள் இயற்கையை, மானிடஉணர்ச்சிகளைச் சித்திரிக்க முற்படமாட்டார்கள். அப்படி முற்பட்டுக் கவிதை எழுதுவதாகக் கனவு கண்டால்தான், நாம் அவர்களுக்குக் "காரிகை கற்றுக் கவிபாடுவதிலும்.........." என்று ஞாபக மூட்டினோம்.

இக்காலத்தில் அவ்வாறில்லை. காரிகை என்னும் பதத்தையே அறியாதவர் எத்தனையோபேர்! அதனால் அதைக்கற்க முற்படுவது எப்படி? ஆனாலும் தமிழ்நாட்டில் புலவரென்றால் ஒரு தனிமதிப்புத்தான். ஏன், புலவர்களைச் சிரமேல்வைத்துச் சிறப்பித்தநாடல்லவா? சரித்திரத்தை நம்பினால் — கம்பருக்கு வெற்றிலைபாக்கு மடித்துக் கொடுத்துக் குற்றேவல் புரிந்த அரசர்வாழ்ந்த நாடல்லவா? அதனால்தான் இருபதாம் நூற்றாண்டில் முதலாய்ச் சமஸ்தானப் புலவர்களைக் காண்கிறோம்.

புலவராயிருப்பதில் தனி மதிப்புமட்டுமல்ல, சிலஉரிமைகளுங்கூட. முதல்உரிமை, சொற்களுடன் விளையாடுதல். துளியைத் துமியாக்கலாம், யாருங் குற்றம்கண்டால் வழக்கில் உள்ளதென்கலாம், சரஸ்வதியைச் சாட்சியாக அழைக்கலாம், தேவர்களையும் மயக்கும்படி இரட்டுறமொழியலாம், போற்றலாம், தூற்றலாம், சொன்ன சொற்களை மாற்றலாம்.

சொற்களோடு 'குஸ்தி' போடுவது புலவருடைய தனியுரிமையல்ல. தற்போது எழுத்தாளர் பேச்சாளர் யாவர்க்கும உரியது. எதுகை மோனைதான் தற்போதைய தமிழ்நடையின் சிகரம். நமது வாக்கியத்தின் நடுவில் ஒரு அடுக்குத் தொடரைச் செருகினால்போதும். வாசகர் அல்லது கேட்பவர் அதன் அழகில் மயங்கிக்கிடக்கையில் நாம் எத்தகைய அபத்தத்தையும் வாய்கூசாது சொல்லலாம். நாம் சொல்லுவது முன்னுக்குப்பின் முரணாயிருக்கிறதே, பொருளற்ற சொற்கோர்ப்பாய் இருக்கிறதே—இதெல்லாம் யார் கவனிக்கப் போகிறார்? அடுக்குத்தொடர்—அதற்கு மற்றெதையும் தியாகம் செய்யலாம். அத்தோடு இரண்டொரு எதுகை அமைந்துவிட்டால், அம்மம்ம! நமது சக்தி யாந்திரீக சக்திதான். கூட்டத்தை நம்மிஷ்டப்படி கூத்தாடச் செய்யலாம்.

பாரதியின் புதுமையை மதிப்பிடுகிறார் ஒருபேச்சாளர். புலமையின் தத்துவத்தை முதலில் நிறுவிப் பின்பாரதியின் புலமையைப்பற்றிப் பேசவந்தார் ஒருவர். புலமையென்றாலென்ன? அதைப் பாரதிசெய்யளில் எம்மட்டுக் காண்கிறோமென்று காட்டுவாரென நினைத்தேன். ஆனால், இதெல்லாம் மேல்நாட்டுக கர்நாடகம். மறுமலர்ச்சி. தமிழுலகு இதைவிட ஒருபடி தாண்டிவிட்டது. பேச்சாளர் வாரிவிட்ட சொல்லடுக்கில் திணறிவிட்டேன். எதுகையும் மோனையும் நர்த்தனம்புரிந்தன. பாரதியிடமிருந்து எடுத்துக் கையாடுகிறாரா? சொந்தச்சரக்கா? ஒன்றும் விளங்கவில்லை. இறுதியில் "மலர்ந்ததுகவிதை, குளிர்ந்தன செவிகள், வளர்ந்தது புவியே, —வாழிய, வாழிய, புதுமையின்வரகவி பாரதிவாழியே" என்று உச்சஸ்தாயில் பேச்சாளர் முடித்ததும் என்ன கர

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேதுருவானவரின் கல்லறை

அர்ச். பேதுருவானவர் மகாலயதளத்தின் மேல்மட்டத்திற்குக் கீழே ஐம்பது அடி ஆழம் வரையில் வத்திக்கான் புதைபொருள் ஆராய்ச்சியாளர் நிலத்தைஅகழ்ந்து ஆராய்ச்சிசெய்தபோது எதைக்கண்டறிந்தார்கள் என்பதைப்பற்றி அறியக் கடந்த ஒருவருடகாலத்துக்கு மேல் கத்தோலிக்க உலகமுழுவதும்ஆவலுடன்காத்திருந்தது. "அப்போஸ்தலர்களது இளவரசரின் கல்லறை கண்டறியப்பட்டிருக்கிறது; அர்ச். பேதுருவானவரின் மகாலயடோம் முதலாவதுபாப்பானவரான றோமாபுரியின் முதல்மேற்றிராணியாரது கல்லறைக்குநேரே நிறுவிநிற்கின்றது" என்று சமீபத்திலே பாப்பரசர் கருதினல்மாருக்குத் தெரிவித்தருளினர். றோமாபுரியிலே அஞ்ஞானசேமக்காலைக்கு அணித்தாயிருந்த நீரோவின் சேர்க்கஸ் நிலையத்திலே அர்ச். பேதுருவானவர் தலைகீழாகச் சிலுவையில்அறைந்து கொல்லப்பட்டு, அதேயிடத்திற்றானே அடக்கஞ்செய்யப் பெற்றாரெனப் பாரம்பரியம் கூறுகின்றது. கி. பி. 258-ம்ஆண்டு கிறீஸ்தவர்கள் அவரது திருமேனியின் பாதுகாப்புக்கு அபாயம்ஏற்படுமோவென அஞ்சியவர்களாய், றோமாபுரிக்குத் தெற்கே மூன்றுமைல் தூரத்திலுள்ள புராதன அப்பியன்பாதையில் அமர்ந்திருக்கும் அர்ச். செபஸ்தியாரின் நிலவறைகளில் கொண்டுபோய் மறைத்துவைத்தார்கள். பிந்த அது மூந்திய அடக்கஸ்தலத்துக்கே திரும்பவும் கொண்டுபோகப்பட்டு, அதன் கல்லறைக்கு மேலாகக் கோவில்ஒன்று அமைக்கப்படலாயிற்று. கி. பி. 326-ம்ஆண்டு கொன்ஸ்தந்தீன் சக்கிரவர்த்தி அக்கல்லறைக்கு மேலாக முதலாவது மகாலயத்தைக்கட்டியெழுப்பினர். அதன் மத்தியஅடுத்தார் அக்கல்லறைக்கு நேர்மேலாக அமைக்கப்பட்டது. 15-ம்நூற்றாண்டின் இறுதியிலும், 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் கொன்ஸ்தந்தீன் சக்கிரவர்த்தி கட்டிய மகாலயம் இடிக்கப்பட்டது. பின்னர் இடித்தெடுத்த கற்கள் கொண்டு நிலத்தைஒப்பரவாக்கி அதன்மீது தற்போதுள்ள மகாலயம்கட்டப்படலாயிற்று. ஆயினும் புதியமகாலயம் திரும்பக் கட்டப்பட்டதோடும், பழைய சாசனங்கள் இழந்துபோகப்பட்டதோடும் காலகதியிலே அர்ச். பேதுருவானவரின் கல்லறைஅமைந்துள்ள சரியான ஸ்தானத்தைப்பற்றிய ஞாபகம் அற்றுப்போய்விட்டது. ஆனல், பாப்பரசரது அடுத்தாரின்கீழ்த்தான் அது இருப்பதாக எப்போதும் நம்பப்படலாயிற்று. ஆனல், அதன் சரியான இடத்தைப்பற்றி நிச்சயமான அத்தாட்சிஎதுவும் இருக்கவில்லை. அதனல் 1939-ம்ஆண்டு அம்மகாலயத்தின் கீழ்ப்பகுதியை அகழ்ந்து ஆராய்ச்சிசெய்யத் தொடங்கிக கடைசியாகச் சென்றவருட ஆரம்பத்திலே அர்ச். பேதுருவானவரின் கல்லறை நிச்சயமாகவே அதுதான் என்று ஆட்சேபனைக்கிடமில்லாதவகையிலே புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தார்கள்.

## சிலுவையும் பிறையும்

அராபிய சங்கத்தின் பிரதம காரியதரிசியான ஐனுப் அஸாம் பாஷா அவர்கள் சிலதினங்களின்மூன் இத்தாலிய றேடியோவில் பேசியபோது, கம்யூனிஸத்தை எதிர்த்துப்போராடுமாறு இஸ்லாமுக்கும் கிறீஸ்து சமயத்துக்குமிடையே ஓர்ஐக்கிய முன்னணியை ஆக்கத்தாமமுயற்சிக்கப்போவதாகத் தெரிவித்திருக்கின்றார். றோமைநகரில் ஓர்வாரம் தங்கியபிறகு கெய்றோவுக்குப் பிரயாணப்படச் சிறிதுவேளையின்மூன் அராபிய உலகத்துக்கு அனுப்பிய ஓர்றேடியோச்செய்தியிலே பரிசுத்த பாப்பரசரையும், இத்தாலிய அரசாங்க தலைவர்களையும் தாம் சந்தித்ததைக் குறிப்பிடலாயினர்.

## அந்தக்குருவானவர் யார்? பாப்பரசரே!

1910-ம்ஆண்டு மார்கழிமாதம் நத்தார்த் திருநாளுக்கு முதல்நாள் ஓர்இத்தாலியசிறுமி இரவு நடுச்சாமப்பூசையிலே முதல் நன்மைபெறுவதற்கு ஆயத்தஞ்செய்துகொண்டிருந்தாள். றோமாபுரியிலுள்ள தேவமாதாவின் மோட்சாரோபண கன்னிகாமடத்துச் சின்னக்கோவிலிலே அந்தமடத்தின் விசாரணைக்குருவானவர் அச்சிறுமியின் மூக்காட்டைச் சரிப்படுத்துவதிலே அவளுக்குத் துணைச்செய்து, தமக்காகவும், தேவதாயாரின் மோட்சாரோபண விசுவாசசத்தியம் ஏதோ ஒருநாள் பிரகடனஞ் செய்யப்படுமெனத் தமக்குள்ள பெரியகம்பிக்கை பூர்த்தியாகவும் ஓர்செபஞ்சொல்லுமாறு அவளைக் கேட்டுக்கொண்டார். இந்தச்சிறுமி முதலாவது உலகயுத்தத்திலே இத்தாலியின் தலைவராக விளங்கியிருந்தவரின் புதல்வியான சிஞ்ஞோரா கார்லா கறபெல்லி ஓர்லான்டோ என்பவளே. அவளும், அப்போது இத்தாலிய நீதிப்பரிபாலன மந்திரியாயிருந்த அவள் தந்தையும், தாயும் திவ்வியநன்மை பெறுவதற்காக முழந்தாட்படியிட்டபோது அச்செபத்தைச் சொன்னார்கள். கனடாதேச ஒற்றுவாநகர் அதிமேற்றிராணியாரான வாச்சொன் ஆண்டவரைக் கௌரவிக்குமாறு சமீபத்திலே றோமாபுரியில் நடைபெற்ற ஓர்விருந்துபசரணையின்போது அப்பெண்மணியே இச்சம்பவத்தை வெளியிடலானள். அவ்வாறு செபஞ்சொல்லும்படியாக அவளைக் கேட்டுக்கொண்ட அந்தவிசாரணைக்குருவானவர்யார்? மொஞ். யூஜினியோ பச்செல்லியே—அதாவது, சென்ற கார்த்திகை 1-ந்திகதி சகலஅர்ச்சியசிஷ்டர்களின் திருநாளன்று அவ்விசுவாசசத்தியத்தைப் பிரகடனஞ் செய்தவரான பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசரே.

## வத்திக்கான் றெயில்வே

வத்திக்கான்றெயில்வேயே உலகில் அதிகஞ் சிறியதாகும், இது ஓர்ஸ்றேஷனையும், கால்மைல்நீளமான றெயிற்பாதையையும், ஓர்பொருட்காட்சிச்சாலையில் பாதுகாத்துவைக்கப்பட்டுள்ள ஓர்றெயினையும்கொண்டிருக்கிறது. ஆயினும் யுத்தம் முடிந்ததுமுதல் இதிலேகூடிய வேலைநடைபெறுகின்றது. இந்தஸ்றேஷனிலிருந்து பஞ்சத்தால் பீடிக்கப்பட்டுவருந்தும் ஒவ்வோர் நாட்டிலுமுள்ள பாப்பரசரின் ஸ்தானிகரிடமும் ஒப்படைக்கப்படவேண்டிய கஷ்ட நிவாரண சாமான்கள் ஏற்றியனுப்பப்படுகின்றன. இவை தவிர, வத்திக்கான் சிற்பசாலைகளில் செய்யப்படுகின்ற பத்திக்குரிய வேதச்சாமான்களுடன் இலக்கியபுத்தகங்களும் அனுப்பப்படுகின்றன. அங்குள்ள சித்திரவேலைக் கைத்தொழிற்சாலை உலகின் ஒவ்வோர்பகுதியிலுமிருந்தே ஆடர்களைப்பெற்று எப்போதும்ம அதிகம்நெருக்கமாக வேலைசெய்துவருகிறது. ஸ்றேஷனிலிருந்து வெளிகொள்ளும் றெயின்கள் பாரியதோர் இருப்புக்கபாடத்தினூடாகச் சென்று அங்கே இத்தாலிய அரசாங்க றெயில்வேயுடன் இணைந்துகொள்ளுகின்றன. வத்திக்கான் இராச்சியத்தைப் பரிபாலனஞ்செய்துவருகின்ற பாப்பரசின் கம்மிஷனுக்குத் தலைவரென்றமட்டிலே கருதினல் கனலிஆண்டவர் வத்திக்கான் றெயில்வேஸ்றேஷனைக் கண்காணிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார். ஸ்றேஷன் மாஸ்றர் என்றமட்டில் இவரே வத்திக்கான் இராச்சியத்தின் ஓர்கோணத்திலிருக்கும் கட்டிடம் ஒன்றுக்கு இடையிடையே நடந்துசென்று அங்கு ஸ்றேஷன் மேடையில்நின்று விசிள்ஊதி றெயின்களை ஓடவைக்கின்றார். றெயில்வேக்கு மேலாக ஓர்காரியாலயத்தைக் கொண்டுள்ளஇவர் வத்திக்கான் இராச்சியத்துக்கு உணவுப்பொருட்களும், விறகும்கொண்டுபோய்க் கொடுக்கப்படுவதை நேர்முகமாக மேற்பார்வையிடுகின்றார். 1919-ம்ஆண்டு நடைபெற்ற லத்தறன்உடன்படிக்கையின்விளைவாய் வத்திக்கான் றெயில்வே அமைக்கப்படலாயிற்று. சான்பியெற்றோ எனப் பெயர்கொண்ட ஸ்றேஷன் அதேவருடம் பதினோராம் பத்திநாதபாபபானவரால் திறந்துவைக்கப்படலாயிற்று.

## இளவரசரான குருவானவர்

சாக்ஸனியின் டியூக் கோமகனும், அந்நாட்டுக் கடைசிஅரசரின் சகோதரரும், ஓர்கத்தோலிக்க குருவருமான வண. மாக்ஸ் வில்கெல்ம் சுவாமியார் சென்றதைமாசம் 12-ந்திகதி வெள்ளிக்கிழமை தமது 80-ம் வயசில் காலஞ்செல்லலாயினர். இவர் 1896-ம்ஆண்டு குருப்பட்டம்பெற்றுக்கொண்டபோது தமது சிம்மாசன உரிமைகளைத் துறந்துவிடலாயினர். சாக்ஸனிநாட்டு ஜோர்ஜ் அரசரின் குமாரனுமான வண. மாக்ஸ் இளவரசர் டிறெஸ்டன் நகரில் பிறந்து லுட்விக்வாப் எனும் பேரான விக்கார் அப்போஸ்தலிக்கு ஆண்டவரால் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றுக் கீர்த்திவாய்ந்த பிரசங்கியாராய் விளங்கியிருந்தார். பூர்வீகபிரிவினைக் கிறீஸ்தசபைகளினதும், கத்தோலிக்க திருச்சபையினதும் ஐக்கியத்துக்காக ஓர்முன்னேடியாகநின்று உழைத்துவந்தார். பிறைபோக் சர்வகலாசாலைப் பேராசிரியராக 1900-ம் ஆண்டுமுதல் கடமைபார்த்துவந்தார்.

## கருதினல்மார் திருச்சங்கதலைவர்

கருதினல்மார் திருச்சங்கதலைவரும், பரிசுத்தபாப்பரசரது றோமாபுரியின் விக்கார்ஜெனறலுமான கருதினல்மார்செற்றி செல்வக்கியானி ஆண்டவர் சென்றதைமாதம் 13-ந்திகதி சனிக்கிழமை காத்திராப்பிரகாரம் காலஞ்செல்லலாயினர். மரிக்கும்போது இவருக்கு வயசு 79. அநேகவருடங்களின்மூன் இவரது கால்களில்ஒன்று வெட்டிச் சத்திரவைத்தியஞ் செய்யப்பட்டமையால் உட்கார்ந்தபடியே இவர் திவ்வியபூசை நிறைவேற்றிவந்தார். சிறுபிராய முதலேஇவர் பரிசுத்தபிதாவின் உற்றநண்பராவர். தாம் பாப்பரசராகத் தெரியப்பெற்றதும் அப்போது நோய்வாய்ப்பட்டிருந்த இந்தக்கருதினலாண்டவரைப் பரிசுத்தபிதா உடனே தானேபோய்ச் சந்திக்கலாயினர். இவர்மூந்த வைத்தியசாஸ்திரம் படித்தபின் தமக்குண்டான கணிதசாஸ்திர திறமைகாரணமாக அதைக்கைவிட்டு நாலுவருடம் எஞ்சினியருக்குப் படித்தபின் தேவஅழைத்தல்காரணமாகக் குருபதவியைத் தெரிந்துகொண்டார். இவர் விசுவாசப்பரப்புதற்சபைக் காரியதரிசியாக இருந்தபோது ஆற்றியமகத்தான சேவைகள்காரணமாக "மிஷனரிய சக்கிராதிபத்திய சிற்பாசாரி"யெனும் புகழ்ச்சிக்குரிய நாமத்தால் அழைக்கப்பட்டார். கடந்த ஆறுமாசங்களுக்கிடையில் காலஞ்சென்ற மூன்றாவது கருதினல் இவராவர். கருதினல் லவிற்றானே சென்ற ஆவணியிலும், கருதினல்வொன் பிறெய்சிங் சென்றமார்கழியிலும் காலஞ்செல்லலாயினர். தற்போது கருதினல்மார் திருச்சங்கத்தில் 51 கருதினல்மாரே இருக்கின்றனர். அச்சங்கத்தின் புதியதலைவராக இப்போது பதவியேற்றிருப்பவர் 66 வயசுடையவரான கருதினல் திசறன்ற் ஆண்டவர். இப்பதவிவகிக்கும் முதற்பிரான்சிய கருதினல் இவரே.

---

— நியூயோக்நகரிலே சறுனக்லேக்சிலுள்ள நோர்த்லண்ட் மோட்டர்ஸ் கம்பெனியின் கத்தோலிக்க சொந்தக்காரரான திரு. ஜே. ஜே. றேஜிஸ் அவர்கள் சென்ற கிறிஸ்மஸ்விழாவின்போது, தமது கம்பெனியின் ஆதாயத்திலே 19,000 பவுணை அதன்வேலைகாரருக்கு உபகரித்துள்ளனர். கம்பெனியின் சகலசெலவுகளும்போக மொத்தவருமானத்தில் நூற்றுக்கு 60 வீதத்தையும் கம்பெனிவேலைகாரர் தங்களுள் பகிர்ந்துகொள்ளுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவர்த்தமானம்

## ருஷிய புதியகால்வாய்

வொல்கா-டன் எனும் இருநதிகளையும் இணைத்து ஸ்ராலின் அமைக்கவிருக்கும் புதியதோர்கால்வாயை வெட்டும்படி 25,000 ஜேர்மனியரும் பலவந்தஅடிமைத்தொழிலில் அமர்த்தப்படவிருப்பதாய்ப் பேர்ளின்நகரில் பிரசுரமாகும் "அபென்ட்" எனும் சனநாயகபத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது. அதனை வெட்டுவதற்குத் தேவையான தொழிலாளர் பட்டாளத்தைச் சென்ற தைமாதம் 30-ந்திகதிக்குமுன் தேடியனுப்ப வேண்டுமென்று சோவியற்ஆதிக்க கம்மிஷனர்கள் கொடுத்த கட்டளையின் பேரிலே கிழக்குஜேர்மனிய கம்யூனிஸ்தஅரசாங்கம் அங்குள்ள காவல்முகாங்களில் ஐந்துவருடங்களுக்கு மேற்படச் சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டுச் சிறையிருந்துவருவாரையெல்லாம் உடனே தானே ருஷியாவுக்கு அனுப்பிவைக்கும்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறது. கால்வாய்வெட்டும்வேலைக்குப் பதில் இவர்களின் சிறைத்தண்டனை காலம் குறைக்கப்படுமென வாக்களிக்கப்பட்டிருக்கிறது. இன்னுஞ்சில தினங்களிலே இவர்களை ஏற்றிச்செல்லும் முதல்றெயின்வண்டி ருஷியாவுக்குப் பிரயாணப்படுமென அப்பத்திரிகை கூறுகின்றது.

## யுத்தமும் எண்ணெய்வளமும்

உலகிற் பெற்றோல்முதலாம் எண்ணெய்வளத்தைப் பரிசிலனை செய்ததிலிருந்து, உலகமுழுவதும் எடுக்கப்படும் எண்ணெயிலே நூற்றுக்கு 8 வீதமே ருஷியாவிடமும், அதன் கூட்டுநாடுகளிடமும் இருப்பதாகவும், மீதியான 90வீதத்தையும் மேற்கத்திய சனநாயகநாடுகளும், மத்திய கிழக்குநாடுகளும் கொண்டிருப்பதாகவும் கண்டறியப்பட்டிருக்கிறது. யுத்தம்ஒன்று மூண்டுகொள்ளுமிடத்து, மேற்குநேசநாடுகள் உலகின் ஒவ்வோர் பகுதியிலுமிருந்தே மேலதிகமாக எண்ணெய் பெறக்கூடியனவாயிருக்கின்றன. சென்ற மகாயுத்தமுடிவிலே இவைகள் 50,000 ஆகாயவிமானங்களுக்குமேல் யுத்தத்தில் பறக்கவிட்டன. இத்தனை விமானங்களுக்கும் வருடமொன்றுக்குச் சராசரிவீதமாக 25 லட்சம் தொன் எண்ணெய் செலவாயிற்று. ருஷியாவிடம் தற்போது உண்டென மதிப்பிடப்படும் 15,000 விமானங்களையும் யுத்தத்தில் ஈடுபடச்செய்கிறதானால் குறைந்தபட்சம் அதற்கு வருடம் ஒன்றுக்கு 70 லட்சம் தொன் எண்ணெய் தேவைப்படும். ஆனால், காக்கேசஸ் நாட்டிலும், ஹங்கேரி, ரூமேனியாமுதலாம் அதன் கூட்டுறவுநாடுகளிலும் எடுக்கப்படும்எண்ணெயில் அவசியயுத்த கைத்தொழில்களுக்குத் தேவையானதுபோக எஞ்சியிருப்பது அதன் ஆகாயப்படைக்குப் போதியதாக மாட்டாது.

## இப்படுகொலை யுத்தம் ஏன்?

கோறியாவிலே பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாயிருந்த பற்றிக் பைர்ன் ஆண்டவரையும், மற்றும் குருமார் கன்னிகாஸ்திரீமாரையும் கம்யூனிஸ்தர்கள் கைதுசெய்து சென்ற ஆவணிமாதம் 27-ந் திகதியன்று றெயினிலே மஞ்சூரியாவுக்கு ஏற்றிச்சென்றார்கள். அவர்கள்சென்ற றெயின் சாறிவென் எனுமிடத்திற்குச் சமீபமாகத் தரித்துநின்றபோது, அங்கு வந்துகூடியசனங்களுக்கு யாதும்பேசுமாறு அவர்கள் கம்யூனிஸ்தரால் கற்பிக்கப்பட்டனர். "உங்களுக்கு ஓர் சொற்பொழிவாற்றப் போதியளவிலே கோறியபாஷையை நாம்பேசுவதில்லை. அதனால் நம்மைமன்னிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்" என்று ஸ்தானுபதிஆண்டவர் கூறினர். இரண்டாவதாய் வண. அன்ரோனியே கொம்பேட் சுவாமியார் பேசியவிடத்து, "ஒருவரோடு சண்டையிட்டு உங்கள் சொந்தநாட்டை ஏன் அழிக்கிறீர்கள்? நீங்கள் எல்லோரும் சகோதரர்கள் அல்லவா? ஏன் இந்தப்படுகொலை யுத்தம்? உங்கள்பட்டணங்களிலும், கிராமங்களிலும் சமாதானமாக வாழ்ந்து சமாதானமாய் வேலைசெய்வது நன்றாகாதா?" எனக்கூறலாயினர். மூன்றாவதாக, சங். பியாத்திறிஸ்எனும் கன்னிகாஸ்திரீ பேசியவிடத்து, "நான் ஐம்பதுவருடகாலம் கோறியாவில்வாழ்ந்துவந்திருக்கிறேன்; உங்கள்அநாதபிள்ளைகளைப் பராமரிப்பதிலும், வளர்ப்பதிலும், அவர்களுக்குக் கல்விபயிற்றுவதிலும் எனதுவாழ்க்கையை அர்ப்பணஞ்செய்திருக்கிறேன்; இப்போதோ அதற்கெல்லாம் கைம்மாறாக நீங்கள் என்னைக்கைதுசெய்து அறியப்படாத ஓர் இடத்துக்கு அனுப்புகிறீர்கள்" எனக் கூறினின்றார்.

# நாளு சங்கதிகள்

—பிரித்தானியகடற்படையைச் சேர்ந்த போர்க்கப்பல்கள் சென்ற 1950-ம்ஆண்டிலே பயிற்சிநிமித்தமாக முப்பதுலட்சம் மைலுக்குமேல் அதாவது பூமியை 120 முறை சுற்றிவரும் தூரத்துக்குமேல் பிரயாணஞ்செய்திருக்கின்றன. அவ்வருடத்திலே அவைகள் இந்திய, உலாந்த, பிரான்சிய, கனடிய, ஸ்கான்டிநேவிய, பெல்ஜிய, அமெரிக்கபோர்க்கப்பல்களுடன் யுத்தப்பயிற்சி செய்திருக்கின்றன.

— பரிசுத்தஸ்தானத்துக்கும் பார்சீக அரசுக்குமிடையே இராசியஉறவுகளை ஏற்படுத்துவதற்கான உடன்பாட்டுப் பேச்சுகள் இப்போது ஏறக்குறைய முடிவடைந்துவிட்டன. அதனால் பார்சியாவிலே தெகரன்நகரில் இருந்துவருகின்ற அப்போஸ்தொலிக்க ஸ்தானுபதியினிடமாகப் பாப்பரசரின் ஸ்தானிகர்ஒருவர் நியமனம்பெறுவர். வத்திக்கானுக்கு ஓர்பார்சீக ஸ்தானிகர் அனுப்பிவைக்கப்படுவார்.

—சென்றபரிசுத்தவருடத்திலே 30 லட்சம்பேருக்குமேற்பட்ட யாத்திரிகர்கள் றோமாபுரியைத் தரிசித்திருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. இவர்களிலே 27 லட்சம்பேர்வரையில் பாப்பரசரின் பொதுப்பேட்டி பெற்றிருக்கின்றார்கள். 1900-ம் ஆண்டின் பரிசுத்தவருடத்தில் 3 லட்சத்து 50 ஆயிரம்பேரும், 1925-ம் ஆண்டின் பரிசுத்தவருடத்தில் 5 லட்சத்து 82 ஆயிரம் பேருமே றோமாபுரிக்கு யாத்திரைசெய்திருந்தார்கள்.

—சமயசுதந்திரம் அருளப்பட்ட காரணமாகத் தங்கள் சரித்திரத்தில் முதன்முறையாக யப்பானியர்கள்இப்போதுதான் தங்கள்இஷ்டப்படி சமயவழிபாடு செய்யக்கூடியோராய் இருக்கிறார்கள்; இது அலையலையாகஅவர்கள் கிறீஸ்துவேதத்திலசேரச் செய்துவிட்டிருக்கிறதென்று நாகாசகிநகர் மேற்றிராணியாரான யமாக்குச்சிஆண்டவர் சமீபத்திலே அயர்லாந்தைத்தரிசித்தபோது கூறியிருக்கிறார்.

—இங்கிலாந்திலே வேல்ஸ்நாட்டில் இற்றைக்கு நூறுவருடங்களின்முன் 6,500 கத்தோலிக்கர் இருந்தவிடத்திலே தற்போது 1,15,000 கத்தோலிக்கர் இருந்துவருவதாக அந்நாட்டுக் கத்தோலிக்க பதிவுச்சங்கத்தைச் சேர்ந்த வண. கோர்டன் அல்பியன் சுவாமியார் தெரிவிக்கின்றார். கடந்த 50 வருடங்களிலும் அந்நாட்டில் 18 கோவில்களும், 9 கன்னிகாமடங்களும் நவமாகக் கட்டப்பட்டிருக்கின்றன.

— 1905-ம் ஆண்டு இந்தப்பிறிமியர் இரத்தினச்சுரங்கத்தில்தான் கல்லினம்என்ற—3,023 கறற்நிறைகொண்ட உலகின் மகாப்பெரிய வைரத்தினக்கல் கண்டெடுக்கப்படலாயிற்று. இது திருன்ஸ்வால் அரசாங்கத்தாலே ஏழாம்எற்வாட் அரசருக்கு அன்பளிப்புச் செய்யப்பெற்றுத் தற்சமையம் இரண்டாகவெட்டப்பட்டு, முடிக்குரிய ஆபரணங்களுடன் இருந்துவருகிறது.

—மொண்பிளாங்மலையின் கீழாகக் குழாய்ப்பாதைஒன்றைக் குடைந்து அமைக்குமாறு பிரான்சிய, இத்தாலிய, சுவிற்சர்லாந்த அரசாங்கங்கள் மூன்றும்சேர்ந்து 5 கோடியே 30 லட்சம்ரூபா செலவுபணம் விடவிருக்கின்றன. அம்மூன்றுதேசங்களினதும் பிரதிநிதிகளைக்கொண்ட கமிற்றி ஒன்று ஜெனிவாநகரிலேகூடி இது விஷயமாகப் பரிசிலனை நடத்திவருகிறது.

—மெக்சிக்கோவிலே1926-ம்ஆண்டு நடைபெற்ற வேதகலாபனையின்போது அரசாங்கத்தாலே கையாடப்பட்டதும் மெக்சிக்கோநகரில் இருந்துவருவதுமான யேசுவின் புராதனஆலயத்தைத் திருத்திக் கத்தோலிக்கரிடம் திரும்பவும் கையளிக்குமாறு அத்தேச அலெமன்பிரசாதிபதி ஆஞ்ஞாபித்திருக்கிறார்.

—1926-ம்ஆண்டு மெக்சிக்கோவில் ஆக்கப்பட்ட வேதவிரோதசட்டங்களில் அநேகம் இற்றைக்குச்சில வருடகாலமாக அமுலுக்குக்கொண்டுவரப்படாமல் கைவிடப்பட்டிருக்கின்றன. அலெமன்பிரசாதிபதி இந்தவேதவிரோத சட்டங்களைப் படிப்படியாக நீக்கிக்கொண்டுவருகின்றார்.

# பருத்தித்துறை, தும்பளை
# பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்
## மாசிமாதம் 11-ந்திகதி

இத்திருநாளுக்கு ஆயத்தமாக மாசிமாதம் 1-ந்திகதி சாயந்தரம் 6 மணிக்கு நோவனைகள் தொடங்கும்.

நிகழ்ச்சிகள் :—

I மாசிமாதம் 10-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு மெழுகுவர்த்தித் தீபஅலங்காரச் சுற்றுப்பிரகாரம்.
II பிற்பகல் 7 மணிக்குப் பிரசங்கம்.
III ,, 7-30 மணிக்கு மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்களால் வேஸ்பர் ஆராதனை—தேவநற்கருணை ஆசீர்வாதம்.
IV 11-ந்திகதி காலை 7 மணிக்குப் பாடற்பூசை.

☞ திருக்கேபியில் யாத்திரிகட்கேற்ற சகலவசதிகளுமுண்டு.
மகாவந். மேற்றிராணியாண்டவர் சமுகமளிப்பார்.

கட்டளைக்தா

Mal. No. 476. Eng.

## மலேரியாவை எதிர்த்துப் போராடுவது சுய தேசாபிமானமுள்ள ஓர் கடமையுமாகும்

உட்டண- மற்றும் உட்டண மத்திம தேசங்களிற்போல மெக்சிக்கோவிலும் மலேரியா உக்கிரங்கொண்டிருக்கிறது. வேறாக்குருஸ், ஒக்ஸகா, சியாப்பாஸ், ரபாஸ்கோஆதியாம் கரையடுத்தபகுதிகளிலே தனதுமகாகொடிய முறையில் அதுஇருக்கக் கண்டறியப்பட்டிருக்கிறது. வருடந்தோறும் எல்லாமாக இருபதுலட்சம்சனங்கள் இப்பயங்கர நோயாலே பீடிக்கப்படுகின்றார்கள். அங்ஙனம் பீடிக்கப்படுகிறவர்களிலே வருடந்தோறும் 25,000 சனங்கள் இந்தக்கொள்ளைநோய்க்கு இரையாகி மடிகின்றார்கள்.

இத்தகைய ஓர்தீமையைத் தடுத்துவிலக்குவதற்காகப் பெரும்அளவாகத் தடைநடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியிருக்கின்றனஎன்று சொல்லவேண்டியதில்லை. விசேஷமாய்க் கடந்த சிலவருடங்களிலே இந்தநோயை எதிர்த்துப் போராடுதற்கென்று பெரிதும்உக்கிரமான இயக்கம் ஒன்று தொடக்கப்பட்டிருக்கிறது.

மலேரியாச்சுரங்கள்உற்பத்தியாகும் மூலகாரணவிஷயமாகவும், அவைகளை எதிர்த்துப் போராடும்விஷயமாகவும் சனங்களுக்குப் போதிப்பதும் அத்தகைய இயக்கத்தின் விசேஷப்பட்ட ஓர்பகுதியாய் அடங்கியிருக்கின்றது.

மலேரியாஎன்பது அனோப்பிலெஸ் எனஅறியப்படும்நுளம்புகளின் ஆண்வர்க்கத்தால் கொண்டுசென்று தோற்றுவிக்கப்படும் ஓர்நோயாகும். நுளம்புகள் மிகச்சிறிய முட்டைகளிலிருந்து புளுவடிவமாகப் பொரிக்கப்படுகின்றன. இந்தமுட்டைகள் கட்டுப்பட்டுநிற்கும் தண்ணீர், சிறுகுளங்கள், கிணறுகள், நீர்த்தொட்டிகள் முதலியவற்றில் சேமித்துவைக்கப்பட்டுள்ளன. இரண்டு வாரத்திலே நுளம்புகள் பூரணமாக வளர்ச்சியடைந்ததும் ஆண்நுளம்பு குத்துவதாலே மலேரியாவை ஒருவரிலிருந்துமற்றவருக்குக் கொண்டுசெல்லக்கூடியதாகும்.

இந்தநோயை எதிர்த்துப் போராடுவதற்காகப் புளுக்களைப் பெருக்கம் அடையாமல் தடுப்பதற்கும், பொரித்தவுடன் இவைகளை அழிப்பதற்கும், நுளம்புகளை ஈனவிரக்கமில்லாது கொன்றொழிப்பதற்கும், அவைகள் கடியாமல் விலக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அவைகளைஎதிர்த்துப் போராடுவதற்கும், கூடியமட்டும் மலேரியா பீடியாமல் விலக்குவதற்குமான மற்றும் ஓர்பலிதமான நடவடிக்கைகுயினைன் பாவித்துவருவதேயாகும்.

இக்காரணத்தை முன்னிட்டுத் தற்போதுஇல்லாமற்போன சர்வதேசசங்கத்தாலே நியமனஞ்செய்யப்பெற்ற மலேரியா நிபுணர்களின் கம்மிற்றியானது, ஓர்கால் மலேரியாகண்டுவருந்தும்போது அதற்கோர் மாற்றுமருந்தாக 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைன் அருந்திவர வேண்டுமென்று 1938-ம்ஆண்டு வெளியிட்ட தனது அறிக்கையிலே விதித்திருக்கிறது. இன்னும் மலேரியாவராமல் ஓர்பாதுகாப்பாக மலேரியாக்காலம் முழுவதிலும் தினமும் 6 கிறேய்ன் குயினைன் அருந்திவரவேண்டுமென அவர்கள்சிபாரிசுபண்ணியிருக்கிறார்கள்.

அவ்வளவாகப் பரந்திருக்குங்காரணமாக மலேரியாவால் ஏற்படும் ஆபத்து விசேஷவிதமாகப் பெரியதாகும். இந்தச்சுரம் சனங்களின் எதிர்த்துநிற்கும் சக்தியைக் கெடுத்துவிடுகின்றது. அதனால்அவர்கள் உதாரணமாக க்ஷயரோகம்போன்ற ஏனைய வியாதிகளுக்குச் சார்பாகின்றார்கள். இவைஎல்லாம்தவிர, தேசத்தின் உற்பத்திச்சாத்தியம் வெகுவாகக் குறைக்கப்படுகிறது. இந்தநியாயத்தை முன்னிட்டுத்தான் மெக்சிக்கோவின் காவற்குறிப்புச்சொல் பின்வருமாறு:

மலேரியாவை எதிர்த்துப்போராடுவது தேசாபிமானமுள்ள ஓர்கடமையுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

மாசிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 2 | கர்த்தரின் காணிக்கை | (வெ) |
| சனி | 3 | அர்ச். பிலாசியார் | (வெ) |
| ஞா | 4 | பஞ்சுகை — அர்ச். கொர்சினு பெலேந்திரர் | (ஊ) |
| திங் | 5 | அர்ச். ஆகத்தம்மாள் | (சி) |
| செவ் | 6 | அர்ச். தீத்துசப்பர் | (வெ) |
| புத | 7 | ஆசிர்வாதரிக்குர்தினம் | (ஊ) |
| வியா | 8 | அர்ச். மாத்தஅருளப்பர் | (வெ) |


சத்தியவேத

# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு

மாசி மாதம் 1-ந் திகதி


## தபசுகாலஒழுங்குகள்

மிகவும் அருமையான சகோதரரே!

இப்போது புதிதாய்ப்பிரசித்தம்பண்ணப்பட்டிருக்கும் திருச்சபைச்சட்டப் புத்தகத்தின்படி இம்மேற்றிராசனத்திலே அனுசரிக்கப்படவேண்டிய ஒருசந்திநாட்களும் சுத்தபோசனநாட்களும் எவையெவையென்றுஇத்தால் உங்களுக்கு அறியத்தருகிறோம்,

**I. ஒருசந்திநாட்கள்:**—பின் வருவனமாத்திரமேயாம். அவையாவன :—தபசுகாலத்தில்வரும் சகலவெள்ளிக்கிழமைகளும், நத்தால்திருநாளின் ஆயத்ததினம், அதாவது மூந்தினநாளுமாம்.

**II. சுத்தபோசனநாட்கள்:**—பின்வருவனவாம். வருஷத்தில்வரும் எல்லா வெள்ளிக்கிழமைகளும், விபூதித்திருநாளும், தபசுகாலத்தில்வரும் எல்லாப்புதன்கிழமைகளும், நத்தால்திருநாளின் ஆயத்தினமும், தேவமாதா பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திருநாளின் ஆயத்தினமுமாம்.

**III.** ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன்திருநாட்களிலும்ஒருசந்தியுமில்லை, சுத்தபோசனமுமில்லை. தேவமாதா பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதிருநாள் அல்லது நத்தால் திருநாள் திங்கட்கிழமையில் வருமானல் அவற்றின் ஆயத்ததினத்துக்குரிய சுத்தபோசனம் அல்லது சுத்தபோசனத்தோடு சேர்ந்த ஒருசந்தி அதற்குமுந்தியநாளில் வைக்கப்படாமல் முற்ருக நீக்கிவிடப்படும்.

**IV.** சுத்தபோசனநாட்களைத் தவிர மற்றஎல்லாநாட்களிலும் போசனவேளையில் மச்சமும் மாமிசமும் கலந்துசாப்பிடலாம்.

**V.** சுத்தபோசனம் என்னத்தில்அடங்குமென்ருல் மாமிசத்தையும், மாமிசத்தின்சாரத்தையும் விலக்குவதிலேயே அடங்கும். ஆனல் முட்டை, பால், வெண்ணெய், பாற்கட்டி இவைகளையும், சமையலுக்குவேண்டிய கொழுப்புவகைகளையும் வருடத்தில்வரும் எல்லாநாட்களிலும் பாவிக்கலாம்.

**VI.** சுத்தபோசனம் காக்கவேண்டியவர்கள் ஆரெனில், ஏழுவயசுநிரம்பின சகலருமாம். ஒருசந்திக்கடனுள்ளவர்கள் ஆரெனில், 21 வயசுமுடிந்தவர்களும் 60 வயது தொடங்காதவர்களுமாம்.

**VII.** ஒருசந்தி என்னத்தில் அடங்குமெனில் ஒருநேரச்சாப்பாடுமாத்திரம் சாப்பிடுவதில் மாத்திரம் அடங்கும். ஆனல், காலை (2 அவுன்ஸ்) மாலை (8 அவுன்ஸ்) சிற்றுணவு அருந்துவது ஒருசந்திக்குத் தடையலல. ஒருநேரப்போசனத்தை மத்தியானத்திலேயாவது மாலையிலாவது வசதிக்குத் தக்கபடி வைத்துக்கொள்ளலாம். மாலையில்வைத்துக்கொண்டால் மத்தியானம் சொற்பஉணவு உட்கொள்ளலாம்.

**VIII.** ஒருசந்திநாட்களிலே உத்தரவாயுள்ள மாலைச்சிற்றுணவிலே முட்டையும்,பாலும், வெண்ணெயும், பாற்கட்டியும் சேர்த்துக்கொள்ளலாம்.

**IX.** சரீரப்பிரயாசையான வேலை செய்கிறவர்களுக்கும், நியாயமான ஒருவேளைப்போசனத்துக்கு வழியில்லாத ஏழைகளுக்கும், வருத்தக்காரருக்கும், சுகப்பட்டு வருகிறவர்களுக்கும், கர்ப்பவதிகளுக்கும், பாலூட்டுகிறவர்களுக்கும் ஒருசந்திக்கடனில்லை. ஆனல் இவர்களும் வேறு நியாயங்களைத்தொட்டு உத்தரவுபெற்றிருந்தாலொழியச் சுத்தபோசனங்காக்கக் கடமைப்பட்டவர்களேயாம்.

**கவனிப்பு:**—மேலே காட்டப்பட்டிருக்கும் இளக்காரங்களைக் கையாடுகிறவர்கள் பழைய ஒருசந்திக்கடனையும், சுத்தபோசனக்கடனையும் வேறுவகையாய் அதாவது பிறநற்கிரிகைகளினுலும், விசேஷமாய் எளியவர்களுக்குத் தருமங்கொடுப்பதினுலும் தீர்க்கப்பிரயாசப்படவேண்டுமென்று பரிசுத்த பாப்பாண்டவரின் உத்தரவுப்பத்திரம் கற்பிக்கின்றது.

இன்னும் விசேஷமான ஏதாவது நியாயங்களினிமித்தம் மேலேகண்டஒழுங்குகளிலேமீளவும்ஏதாவது இளக்காரஞ்செய்யவேண்டுமானல் ஒவ்வொருவரும் தத்தம் கட்டளைச்சுவாமிமாரிடம் உத்தரவுபெற்றுக்கொள்ளலாம் அப்படிப்பெறும் இளக்காரங்களுக்குப்பதிலாய் நம்முடைய குருமடத்துக்குத் தரும உதவி செய்யவேண்டும். அப்படிச செய்ய இயலாதவர்கள் தங்கள் கட்டளைச்சுவாமிமாரிடங் கேட்டு அதற்காக வேருெருநற்கிருத்தியத்தை வைப்பித்துக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்திலே 1951-ம் ஆண்டு தைமாசம் 30-ந்திகதி விடுக்கப்பட்டது.

✠ ஜே.எமிலியானுஸ்பிள்ளை, O.M.I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்

☞ இந்தநிருபத்தைத் தபசுகாலத்தின் முன்வரும் 1-ம்ஞாயிற்றுக்கிழமையில் சகலவிசுவாசிகளுக்கும் கோவிலிலேவாசித்து விளங்கப்படுத்தவேண்டியது.

— இந்தியாவிலே பாப்பரசரின் ஸ்தானீகராய் இருந்துவருகிறவரான மகாமேன்மைதங்கிய லேயோ கியர்க்கெல்ஸ்ஆண்டவர் சமீபத்திலே மலையாளத்துக்கு விஜயஞ்செய்திருந்தபோது, மலையாளப் புதியமேற்றிராணிமார்இருவரோடும் பரனங்கானத்திலுள்ள சங். அல்போன்சா கன்னிகாஸ்திரீயின் கல்லறையில் செபஞ்செய்து, கிளாரு மடத்தையும் தரிசித்துச் செல்லலாயினர்.

## சுதேச வர்த்தமானம்

### முப்பதினுயிரம் மூடைமா

பி. ஐ. கனருஎன்ற உணவுக்கப்பல் ஆஸ்திறேலியாவிலிருந்து இலங்கைக்கென்று ஏறக்குறைய 30,000 மூடைமா ஏற்றிக்கொண்டு சென்றசனிக்கிழமை கொழும்புவந்து சேரலாயிற்று. இதுதவிர 75 தொன் பாலாகாரமும், 47 தொன் உருளைக்கிழங்கும், 23 தொன் தோடம்பழமும், 73 தொன் மாமிசமும், மற்றும் பட்டரும், ஜாமுமாக வேறும் 2,870 தொன் சாமான் இலங்கைக்கென ஏற்றிவந்துள்ளது.

### இந்தியரும் பிரசாஉரிமையும்

இலங்கையிலுள்ள இந்தியர்களை இலங்கைப்பிரசைகளாகப் பதிவுசெய்வதைத் தற்போதைய வீதத்தில் வேலைசெய்துகொண்டுபோனல், அடுத்த பொதுத்தேர்தல் வரும்போது தேர்தல் இடாப்புகளில் இன்னுமே அநேகர் இடம்பெற மாட்டார்களென்று இலங்கை இந்தியகாங்கிரஸ் கவலைகொள்கின்றது. காங்கிரஸ் அப்போது பிரதிநிதிகள்சபையிலே தனதுபிரதிநிதிகள் எவருமே இல்லாதநிலைமையில் விடப்படுமெனச் சிந்திக்கின்றது. இந்திய—பாகிஸ்தானியவாசிகளின் பிரசாஉரிமைச்சட்டத்தின்கீழ் அவர்களைப்பதிவுசெய்யும்வேலை மந்தகதியில் நடைபெறுவதே அதற்குக்காரணமாகும். இலங்கையில்வாழுகின்ற சுமார் எட்டுலட்சம் இந்தியர்களில் இதுவரை நாலாயிரம் பேரே பதிவுசெய்யப்பெற்றுத் தேர்தல் இடாப்புகளில் தங்கள் பெயரைக் கொண்டிருக்கிருர்கள்.

### மன்னுரும் நெல்விலையும்

மன்னுர்ப்பகுதியிலே மழைபெய்து வரட்சிநீங்கியபோதிலும் நெல் புசல் ஒன்று 14 ரூபாவாக ஏறியிருக்கிறது. ஒருபடி அரிசி 1 ரூபா 15சதமாகவிலைப்பட்டபோதிலும் பெற்றுக்கொள்வது கஷ்டமாயிருக்கிறதாம் சமீபத்தில் பெய்தமழையாலே கட்டுக்கரைக்குளம் மூன்று மாதங்களுக்குப் போதிய தண்ணீரைக் கொண்டிருக்கிறது. மழைபெய்தமையாலே நெல்வேளாண்மையில் அரைவாசி பாதுகாக்கப்பட்டுவிட்டது. ஆயினும்விலைவாசி அதிகமாகவே இருக்கிறது. மன்னுரில் தேங்காய் ஒன்று 30 சதமுதல் 40 சதம்வரையில் விலைப்படுகிறது. அங்குள்ள ஐக்கிய பண்டகசாலைகள்வெங்காயம்உதவவசதி இல்லாதநிலைமையில் இருக்க, கள்ளமாக்கெற்றில் ஒருறுத்தல் 50 சதமாகக் கிடைக்கக்கூடியதாயிருக்கிறது.

### றெயில்வேய்த் தொழிலாளர்

ஒருமைலுக்கு ஒருசதவீதம் சலார் கொடுத்து றெயினிலே பிரயாணஞ்செய்யும் றெயில்வேய்த் தொழிலாளிகளுக்கு இருந்துவந்தசலுகையை இந்த மாசிமாதம் 1-ந்திகதியிலிருந்து நிறுத்திவிட றெயில்வே அதிகாரிகள் தீர்மானித்திருக்கின்றனர். அதனுல் இன்று தொடக்கம் இந்தத்தொழிலாளிகள் அரைச்சலார்கொடுத்து மூன்ரும்வகுப்பில் பிரயாணஞ்செய்யவேண்டும்.

### வாழ்க்கைச்செலவு கூடியது

சென்றதைமாச வாழ்க்கைச் செலவுப்புள்ளிகள் 281 ஆக ஏற்றமடைந்திருக்கின்றன. அதாவது சென்றமார்கழியிலும் 8 புள்ளிகளால் அதிகரித்திருக்கின்றன. சென்றமார்கழியில் செலவுப்புள்ளிகள் 273. என்ருலும் சென்றபுரட்டாசியில்தான் அவைகள் மிகக்கூடியனவாய் 283 ஆகவிருந்தன. இம்மாசம் 8 புள்ளிகள் கூடியமையாலே 100 ரூபாவும் அதற்குமேலும் சம்பளம்பெறுகிறவர்கள் 94 ரூபா 30 சதம் பஞ்சப்படியாகப் பெற்றுக்கொள்வார்கள். சென்றமாதம் புள்ளிகள் அதிகரிக்கக் காரணம் அரிசிவிலையும், தேங்காய்யெண்ணெய், மிளகாய்வற்றல், பயறு, பருப்பு, கொத்தமல்லி, மீன், புடவை ஆதியனவற்றின் விலையும் அதிகரித்தமையே.

## உதவிநன்கொடைபெறும் பாடசாலை ஆசிரியர்களின் இளைப்பாறுதல்

இளைப்பாற்றுச்சம்பளத்தைக் கணக்கிட்டுக்கொடுப்பதில் தாமதம் ஏற்படுதலைத் தவிர்க்கும்நோக்கத்துடன் பின்வரும் முறையில் உதவிநன்கொடைபெறும் பாடசாலைஆசிரியர்கள் ஒழுகவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருஆசிரியரும் தாம்கட்டாயம் இளைப்பாறவேண்டிய திகதிக்குக் குறைந்தபட்சம் ஆறுமாதகாலத்துக்குமுன்னர் தமதுமுகாமைக்காரருக்கூடாக இளைப்பாற்றுச்சம்பளத்துக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

2. உதவிநன்கொடைபெறும் ஆங்கிலபாடசாலைகளுக்கான ஒழுங்குச்சட்டத்தின் 16 (VI) ம் விதிப்பிரகாரம் அல்லது உதவிநன்கொடைபெறும் சுவபாஷா, இருபாஷா பாடசாலைகளுக்கான ஒழுங்குச்சட்டத்தின் 18 (VI)ம் விதிப்பிரகாரம் முகாமைக்காரர் எவ்வாசிரியரையும் இளைப்பாறச்செய்ய விரும்புமிடத்து, அவ்வாசிரியருக்குக் குறைந்தபட்சம் மூன்றுபஞ்சாங்கமாத அறிவித்தல் கொடுக்கத்தக்கதாக எமது அங்கீகாரத்தை நேரகாலத்தோடு பெற்றுக்கொள்ளவேண்டும். குறித்தஆசிரியரை இளைப்பாறச்செய்தற்குரிய காரணங்களை விவரமாகக்கொடுத்து, அவ்விஷயம்பற்றி வித்தியாதிபதி, A. S. கிளைக்கு எழுதவேண்டும். மேலும் அவ்வாசிரியர் தமது இளைப்பாற்றுச் சம்பளத்துக்குக் காலந்தாழ்த்தாது விண்ணப்பிக்கவேண்டும்.

3. இளைப்பாற்றுச் சம்பளத்துக்கான சகலவிண்ணப்பங்களையும் வித்தியாதிபதி, P கிளைக்கு அனுப்பவேண்டும். விண்ணப்ப மாதிரிப்பத்திரங்களை அக்கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. இச்சுற்றுநிருபத்தில் அடங்கியவற்றைச் சகலஆசிரியர்களுக்கும் அறிவிக்கவும்.

ஆர். ஜே. எவ். மேன்டிஸ்
வித்தியாதிபதிக்காக

## சேர் பிரான்சீஸ்மொலமுறே காலஞ்சென்ருர்

ஸ்ரீலங்காவின் முதற்பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையின் முதல்ஸ்பீக்கர் அதாவது சபாநாயகராக விளங்கியிருந்த சேர் பிரான்சீஸ் மொலமுறே அவர்கள் சென்ற 25-ந்திகதி வியாழக்கிழமைஇரவு எதிர்பாராதவிதமாய் மரணத்திரையில் மறைந்தமையாலே இலங்கை தனது பெரியசனத்தலைவர்களில் ஒருவரையிழந்து கவலையில் மூழ்கலாயிற்று. மரிக்கும்போது இவருக்குவயசு 67. இலங்கையின் சுதந்திரஇயக்கத்திலே ஆரம்பகாலமுதல் சிறப்பாக உழைத்துவந்தவர்களில் இவரும் ஒருவராவர். புராதன கண்டிச் சிங்களகுடும்பம் ஒன்றைச்சேர்ந்த இவர் ஓர்சிறந்த அரசியல்வாதிமாத்திரமல்ல, பிரபல வழக்கறிஞருமாவர். இவர் அரசியற்துறையில்இறங்கி 1924-ம்ஆண்டு சட்டசபைப் பிரதிநிதியாயினுர். அரசாங்க சபையின் முதற் சபாநாயகராகும் பெருமையும், பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையின் முதற்சபாநாயகராகும் பெருமையும் இவருக்கே கிடைக்கலாயிற்று. சபாநாயகர்என்றமட்டிலே சனநாயகநடைமுறைகளை இவர் பரிபாலித்துவந்த திறமை பாராட்டத்தக்கது. இவரின் மரணத்தையிட்டுச் சென்றதிங்கட்கிழமை ஓர்அரசாங்கவிடுமுறையாகப் பிரகடனஞ்செய்யப்படலாயிற்று. அன்று பிற்பகல் இவரது பிரேததகனம் கணத்தைச்சேமக்காலையில் நடைபெற்றபோது இரண்டுலட்சம் மக்கள் குழுமியிருந்தார்களெனின் இவரின் கனகாத்திரத்தைப்பற்றி எடுத்துக்கூறவேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், சிறுத்தீவு

## பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்

## 11—2—51.

இத்திருநாளுக்கு ஆயத்தமாக மாசிமாதம் 8-ந் திகதி வியாழக்கிழமைமுதல் பி. ப. 5-30 மணியளவில் செபமாலை, பிரார்த்தனைமுதலிய பத்திமுயற்சிகள் நடைபெற்றுச் சனிக்கிழமை சாயந்தரம் (வேஸ்பர்) மாலைஆராதனைபாடி மெழுகுவர்த்தித் தீபாலங்காரத்துடன் திருச்சுரூபசுற்றுப்பிரகாரமும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமைகாலை 7 மணியளவில் திவ்வியபூசையும் நடந்து, அதன் முடிவில் அன்னதானம் வழங்கப்படும்.

E. Pomykol, O. M. I., கட்டளைக்குரவர்.

மாதகல் துறை

## பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்

இவ்வருஷம் பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள் மாசிமாதம் 8-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 18-ந் திகதி காலை அதிசிறப்பாக முடிவாகும்.

17-ந் திகதிசாயந்தரம் 7 மணியளவில் பரிசுத்த லூர்துநாயகியின் திருச்சுரூபம் சென் தோமஸ் ஆலயத்திலிருந்து ஆடம்பரவைபவங்களுடன் மெழுகுவர்த்தித் தீபஅலங்கார சுற்றுப்பிரகாரமாகத் திருக்கெபிசெல்ல, அங்கே மகாவந். மேற்றிராணியாண்டவரவர்களால் வேஸ்பரென்னும் மாலையாராதனை பாடப்பெற்றுச் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்படும். மறுநாட்காலை மகாவந். மேற்றிராணியாண்டவரவர்களால் பாடற்பூசை நிறைவேற்றப்படும்.

[யாத்திரிகட்கேற்ற சகல வசதிகளுமுண்டு.]

கட்டளைக்குரவர், மாதகல்.

## பாப்பரசரின் ... ... நைற்பட்டம்

யாழ்ப்பாணம், பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவில் பிரதமமூப்பரும், அரசாங்க வைத்தியபகுதியிலே நெடுங்காலம் வைத்தியகடமை பார்த்துக் கடைசியாக யாழ்ப்பாண ஜே. எம். ஓ. ஆகவிருந்து இளைப்பாறியவருமான டக்றர் சென்ஜோண் புவிராஜசிங்க அவர்களின் சமூகசேவைகளையும், கத்தோலிக்க சேவைகளையும் பாராட்டிப் பரிசுத்தபாப்பரசர் அவருக்குப் பெரியகிறகோரியாரின் நைற்பட்டம் சன்மானித்திருக்கிறாரென அறிந்து சந்தோஷமானோம். புதிய நைற்பட்டவர்த்தனரான செவாலியர் சென்ஜோண் புவிராஜசிங்கஅவர்கள் இற்றைக்குச் சுமார் 25 வருடங்களின்முன்னே நமது ஆசனக்கோவில் பிரதமமூப்பாக விளங்கியிருந்தவரும், பத்தாம்பத்திநாத பாப்பானவராலே "பெனெமெறென்றி மெடல்" சன்மானிக்கப்பெற்றிருந்தவருமான காலஞ்சென்ற எம். ஜே. புவிராஜசிங்க முதலியாரின் புதல்வர். தாம் வைத்தியகடமை ஆற்றிய இடங்களில்எல்லாம் இவர்சமூகசேவைகளிலும், சிறப்பாகக்கத்தோலிக்கசேவைகளிலும் அதிகமாகஈடுபட்டுத் தமது உற்சாகமூட்டும் மொழிகளாலே எல்லோரையும் சற்கருமங்களிற்றூண்டி ஊக்கப்படுத்திவந்தார். தமது ஹாஸ்யம்நிறைந்த சொற்பொழிவுகளாலும், சங்கீதவிற்பன்னத்தாலும், அனுபவத்திற்கண்ட நன்மதிகளாலும் சபைக்கூட்டங்களையும், பல்வேறு கொண்டாட்ட வைபவங்களையும் இவர்பரிமளிக்கச்செய்துவந்திருக்கின்றார். பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் புதியஆசனக்கோவில் திருப்பணிமட்டிலே இவர் பெரிதும் ஆர்வங்காண்பித்து முன்னணியில்நின்ற மாதாபக்தர்களில் ஒருவராகவிளங்கியும், அதன் நிதிக்கென்று தாம்வாக்களித்த பணத்தொகையை எவர்க்குமே ஓர் நன்மூன் மாதிரிகையாக மாதந்தோறும் கிரமமாகவழங்கியும், தாம் உத்தியோகமாற்றம் பெற்று யாழப்பாணம்வந்துள்ள காலமுதல் இங்கு நடைபெற்றுள்ள கத்தோலிக்கஇயக்கங்களிலும், மற்றும்பெரிய உற்சவங்களிலும் சிறப்பாகப்பங்குபற்றியும் வந்திருக்கின்றார். சென்றமகாயுத்தம் நடைபெற்ற காலத்திலே இலங்கைவைத்திய பட்டாளத்தில் ஓர் கப்ரிணகச் சேவைபுரிந்திருக்கிறார். 1925-ம் ஆண்டிலும், சென்ற 195[illegible]-ம் ஆண்டிலும் பரிசுத்தவருட யாத்திரிகராகரோமாபுரியைத்தரிசித்திருக்கின்றார். இவரும், இவரது தர்மபத்தினியாரும், பல்வேறு தர்மகைங்கிர்யங்களுக்கும், சமயகருமங்களுக்கும் பணம்வழங்குவதில் காண்பித்துவரும் உதார சிந்தை பாராட்டத்தக்கது. இந்தச் சுபசந்தர்ப்பத்திலே டக்றர் அவர்களுக்கு நாமும் சோபன வாழ்த்துக் கூறுகின்றோம். இன்னும் பலவருடகாலம் இவர் சுகசீவியாக வாழ்ந்து சற்கருமங்களில் பின்னரும் அதிகமாக ஈடுபட்டு உழைத்துவர அருள்பாலிக்குமாறுதிருவருளை இரந்து கொள்ளுகின்றோம்.

## சுதந்திர ஞாபகவிழா

இலங்கை சுதந்திரம்அடைந்த நான்காவதுவருட நிறைவுவிழா இம்மாசம் 4-ந் திகதியும், 5-ந் திகதியும் வழமைபோல வைதிக, லௌகிகவைபவங்களுடன் குதூகலமாய்க் கொண்டாடப்படவிருக்கிறது. நம்மேற்றிராணியாண்டவர் ஆஞ்ஞாபித்துள்ளபடி 4-ந் திகதி ஞாயிறுவாரம் எமது மேற்றிராசனத்திலுள்ள கோவில்கள் சிற்றாலயங்களிலெல்லாம் லங்காநாயகிக்குரிய விசேஷபாடற்பூசையும், விசேஷ பிரசங்கங்களும நடந்தேறும். அன்றுதினம் நிகழும் விசேஷ வைதிகசம்பவங்களுள், தேவத்தையிலே லங்காநாயகியின் பேரால் கட்டியெழுப்பப்படவிருக்கும் பஸிலிக்காஎனும் மகாலயத்துக்குக் கொழும்பு அதிமேற்றிராணியாண்டவரால் அஸ்திவாரக்கல் ஆசீர்வதித்து நாட்டும்திருவைபவமும் ஒன்றாகும். 5-ந் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்குத் தேசீய விழாவையிட்டுச் சகலகோவில் மணிகளும் நாதகீதஞ்செய்து ஆர்ப்பரிக்கும். பிற்பகல் 5 மணிக்குத் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும், மரியாயின் மாசற்றஇருதயத்திற்கு நேர்ந்து ஒப்புக்கொடுக்கும் வைபவமும் நடைபெறும். யாழ்ப்பாணத்தில் நடந்தேறவிருக்கும் பொதுக் கொண்டாட்டங்களிலே 4-ந் திகதிபிற்பகல் பலாலி ஆகாய விமானநிலையத்திலிருந்து யாழ்ப்பாண நகரமண்டபம்வரையில் ஓர் சைக்கிள் மரதன் ஓட்டப் போட்டியும்அடங்கும். 5-ந்திகதி பிற்பகல் 5.15 மணிக்குப் பொலிஸ் மைதானத்திலே பொலிசர், சாரணர், பாடசாலைப்பிள்ளைகளின் பவனியும், அதனைத்தொடர்ந்து ஓர் பகிரங்ககூட்டமும் நடந்தேறவிருக்கின்றன.

## நான் கவிஞனுய் இருந்தால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோஷம்! குழுமியிருந்த கல்லூரி மாணவர்களும் "பாருங்க சார், என்ன அருமையான 'ஸ்பீச்'? ஒரே அமர்க்களம் பாருங்கள்" என்று தலையசைத்தனர்.

சமீபத்தில் நாடகமொன்று பார்த்தேன். அரசனைக்கொன்று முடிகவர்ந்த சதிகாரச்சேனைத் தலைவனை எதிர்த்து நின்றான் ஒருவீரன். உணர்ச்சிசெறிந்த கட்டம். ஆனல், அவ்வுணர்ச்சிப்பெருக்கிலும் மோனைஎதுகையமைப்பு ஒருதுளி பிசகவில்லை. "வஞ்சகா, உன்பேச்சில், அறிந்தேன் உன்சூழ்ச்சி, மடிந்திடும் உன்ஆட்சி, வானிறைவனே சாட்சி." "வசனம்ரொம்ப அபாரம்சார்"என்றார் பக்கத்திலிருந்து காதுகுளிரக் கேட்டுக்கொண்டிருந்த ஒருரசிகர்.

புலவரது உரிமைகளைப்பற்றி ஆரம்பித்து எங்கேயோ கொண்டுவந்து முடித்துவிட்டேன். ஆம், புலவருக்குத் தனியுரிமை ஒன்றுண்டு. அதை மறந்துவிட்டேன். அவர்கள் கருத்துக்களைப்பற்றி அவ்வளவு கவனம்செலுத்தவேண்டிய அவசியமேயில்லை. கருத்து 'ஆழ்ந்ததாய்,' பொதுமக்கள் அறிவைத் தாண்டியதாய்இருக்கவேண்டும். நமதுநாட்டுத் தற்காலத்தத்துவ ஞானிகளும் இதேகொள்கையைத்தான் பின்பற்றுகின்றனர். அரசியல்வாதிகளும், கலாசாலைப் பேராசிரியர்களும், ஏன் ஏழைகளைக்கசக்கிப்பிழிந்து கொழுத்த முதலாளிகளும் பேச்சிலும் எழுத்திலும் தத்துவ ஞானத்தில் புகுந்துவிடுகின்றனர். கண்ணன் உபதேசத்தை ஆணிவேறு, அக்குவேறாகக் கழற்றிக்காட்டி விடுகின்றனர். "எல்லாத்திலும் பரவிக்கிடக்கும் அப்பரமாத்மா, ஒளியினுள் ஒளியாய், பாட்டினுள்பண்ணாய், மலரினுள் மலராய், என்று சில வார்த்தைகளை அடுக்கினல் போதும். அரைஉண்மைகளை உணர்ந்த நமது முற்கால ஞானிகளைவிட உயர்ந்தஞானிகளாய் விடுகிறோம். "மேல்நாட்டுஞானமெல்லாம் என்ன சார், சும்மா அடுப்பிலே போடுங்க........நம்ம பெரியோர் எல்லாத்தையும் ஒரு வார்த்தையிலே அடக்கிவிட்டார்கள், கடுகைத்துளைத்தமாதிரி.... அகம்பிரம்ம ஞானம்."

என்னமோ நான் புலவனுகவிருக்க விரும்புவது இந்தமதிப்புக் காகவுமல்ல, இந்தஉரிமைகளுக் காகவுமல்ல. கவிதையென்றால் எனக்கு ஒருபித்து, ஒருவெறி. கவியுலகு கனவுலகாக எனக்குக் காட்சியளிக்கவில்லை. கவி எவ்வளவுதூரம் தன் கற்பனசக்தியை உபயோகித்துக் கவிதைவரைந்தபோதும், அதன்உலகம் இப்புலன் உலகைவிட, தினவாழ்க்கையைவிட, உண்மையான உலகாகவே படுகிறது. அவனதுநோக்கு, காலம், இடம், புலனுணர்ச்சி, அறிவுணர்ச்சி இவற்றையெல்லாந்தாண்டி மேலெழும்புகிறது. நித்தியஉண்மைகள் அவன்கண்முன் நிர்த்தனம் புரிகின்றன. வானின் இளமேகத்தில் நம்பிக்கையையும், தடாகத்தின் தாமரைமலரில் அன்புமுகிழ்வையும், பரந்தசமுத்திரத்தில் பரம்பொருளின் வரையற்ற தன்மையையுங் காண்பதற்கு அவன்ஏதோ ஒருபுதிய தெய்வீகமொழியை உணர்ந்திருக்கிறான். அம்மொழியின் அகராதி அவன்கையில் இருக்கிறது. இதுதான் அவனது உண்மையானமதிப்பு, மேலான உரிமை,—இதைத்தான் நம்முன்னோர் வரகவியின் "வரம்" என்றனர். இவ்வானுலகமொழியின் பொருள் மட்டும் எனக்கும் தெரிந்திருந்தால், நான்மட்டும்கவிஞனயிருந்தால்.... !

## மின்சாரதீபவசதி

கடலணைநிலத்தில் கட்டப்பட்டிருக்கும் வீடுகளுக்கு மின்சாரதீபங்கள் உதவும்விஷயமாய் யாழ்ப்பாணமேயர் அரசினருக்குச் செய்துகொண்ட மனுவின்பேரிலே சுகாதார—தலஸ்தாபன மந்திரியார் அதற்கென்று பாராளுமன்றத்திலே ஒருலட்சம் ரூபா கேட்டு ஓர் உபமான்யப் பிரேரணை கொண்டுவரவிருக்கின்றார். சென்ற 26-ந்திகதி நடைபெற்ற யாழ்ப்பாணநகரசங்க கூட்டத்திலே இது செய்திவெளிவரலாயிற்று.

—பிறிற்ரோறியாவுக்குச் சமீபமான பிறிமியர் இரத்தினச்சுரங்கத்திலே அதிகம் பிரகாசமானதும், ஏழுலட்சம்ரூபா பெறுமதியுள்ளதுமான நீல-வெள்ளை வைரக்கல்லொன்று கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இது 195 கறற் நிறைகொண்டதாகும்.

—பிரித்தானிய மாணவர்களின் தேசீய ஐக்கியசங்கமானது கம்யூனிஸ்த ஆதிக்கத்திலுள்ள சர்வதேசமாணவர்களின் ஐக்கியசங்கத்தை விட்டுவிலகத் தீர்மானித்திருக்கிறது. இங்கிலாந்திலும், வேல்சிலும், வட அயர்லாந்திலும் 147 கல்லூரிகளைச்சேர்ந்த 1,05,000 மாணவர்களின் சம்மதவாக்கின்பேரிலேயே அவ்வாறுசெய்பத் தீர்மானமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

விசேஷ அனுபந்தம்

# சீனுவைவிடுவித்து சனநாயகத்தை வளர்ப்போம்

அமெரிக்காவிலுள்ள சீனர்களின் ஸ்தாபனமானசீனமாணவர்-உத்தியோகஸ்தர்கள்சங்கம் கோறியாவில் செஞ்சீனுவின் ஆக்கிரமிப்பைக்கண்டித்துச் சீனுவில்கம்யூனிஸத்தைஎதிர்க்கவும், அமெரிக்காவுடன் நீடித்தநட்புக்கொள்ளவும் வகைசெய்யவேண்டுமெனக் கோரியிருக்கின்றது. சங்கத்தின் அறிக்கை வருமாறு:

"மனித சமுதாயத்தின் வாழ்விலேயே சோதனைமிக்கதோர் தருணம் இது. ஐயாயிரம்ஆண்டுகளாய் இருந்துவரும புராதன சீனநாகரீகத்துக்கு இன்று சீனக்கம்யூனிஸ்தர்கள்கையில் அபாயம்நேர்ந்திருக்கிறது. நாற்பத்தேழரைக்கோடி சீனமக்கள் இன்று பேச்சுச்சுதந்திரமின்றித் தவிக்கிறார்கள். தங்கள் சுதந்திரத்தைப் பறிகொடுத்து, கடவுள்கொடுத்த உரிமைகளை இழந்து, தங்கள்விருப்பத்துக்கு மாறாக ஆயுதமேந்திப் பெய்ப்பிங் நிர்வாகத்தின் உண்மைஎசமானர்களான அந்நியருஷியர்களுக்காகப் போர்செய்யும் கதி அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் உலகஅமைதிக்கும் பங்கம் ஏற்பட்டிருக்கிறது.

"1949-ம் ஆண்டின் இறுதியில் தாங்கள் பதவியைஅபகரித்ததுமுதல், புதுச்சீனநிர்வாகம்தான் சீனமக்களின் நலனுக்காகவும், அமைதிக்காகவும் பாடுபடும் என்று சொல்லிவந்தது. நாங்களும் நிசமென்று வாளாவிருந்தோம். ஆனால் இப்போதோ, மக்களின்வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும், பிறநாடுகளுடன் சுமுகமான உறவுகொள்வதற்கும்பதிலாகச் சீனக்கம்யூனிஸ்தர்கள் விபரீதநடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்கள். கோறியாவிலே சீனக்கம்யூனிஸ்தபடைகளின் பலாத்காரத்தலையீடு, சீனமக்களின்விருப்பத்துக்கு விரோதமானசெயலே. சீனுவின் கோடிக்கணக்கான மக்களில் 50 லட்சம்பேரே கம்யூனிஸ்தர்கள்என்பதை நினைவில்வைக்கவேண்டும்.

"சீனமக்கள் அமெரிக்கர்களுடன் போரிட ஏதாவது காரணம் உண்டா? அமெரிக்கர்கள் உண்மையிலேயே ஆக்கிரமிப்பாளர்களா? 1784-ம் ஆண்டு முதன்முதலாகச் சீனச்சக்கிரவர்த்தினி என்ற ஒருஅமெரிக்ககப்பல் கன்ரன் துறைமுகத்தை அடைந்ததுமுதல் சீனமக்களின் நண்பனாகவே அமெரிக்கா இருந்துவந்துள்ளது. 1900-ம் ஆண்டு பொக்ஸர்கலகத்திற்காக அமெரிக்காவுக்குச் சீனுஅளிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட நஷ்டஈட்டுத்தொகையையும் அமெரிக்கா விட்டுக்கொடுத்து, அதைச்சீனமக்களின்கல்விக்குப் பயன்படுத்தச்சொல்லிற்று. 1915-ம் ஆண்டு யப்பான் தனதுகொடூரமான 21 நிபந்தனைகளைப் பிரகடனப்படுத்தியசமயம், அமெரிக்கஐக்கியதேசந்தான் முதன்முதல் அதைக்கண்டித்தது. 1931-ம் ஆண்டு யப்பான் மஞ்சூரியாவை ஆக்கிரமித்தபோது, அமெரிக்கா அதை அங்கீகரிக்கமறுத்ததே சீனுவின் பிரதேசஉரிமையையும், சுயேச்சாதிகாரத்தையும் காப்பாற்றஉதவியது. இரண்டாவது உலகமகாயுத்தத்திலோ, அமெரிக்காதான் சீனுவின் மிகநெருங்கிய தோழனாகவிளங்கிற்று.

"சீன - ருஷிய உறவின்போக்கையும், சரித்திரபூர்வமாய்க் கவனிப்போம். 17-ம் நூற்றாண்டின் மத்தியில் ஓயாத எல்லைச்சச்சரவுகள்! 19-ம் நூற்றாண்டின்மத்தியில் சீனுவிலே உள்நாட்டுக் கலவரங்கள் இருந்ததைப் பயன்படுத்திக்கொண்டு ருஷியபடைகள் சீனுவின் ஆமர்நதிதீரத்தின்மேல் படையெடுத்துவந்தன. 1858-ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின்விளைவாக ஆமர்நதிக்கு வடக்கேஉள்ள சகலபிரதேசங்களையும் ருஷியாஎடுத்துக்கொண்டது. அதுமட்டுமன்றி, ஆமர்நதியின் கரைநெடுகவும், உசூறிநதியின் கரைநெடுகவும் இருபுறமும் சீனு, ருஷியா இருதேசங்களுக்கும் சொந்தமாயின.

"1895-ம் ஆண்டுமுதல் 1900-ம் ஆண்டுக்குள் மீண்டும் சீனஉள்நாட்டுக் குழப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு ருஷியர்கள் மஞ்சூரியாவுள் ஊடுருவிவந்து, அதனைத்தங்கள்கைக்குள் வைத்துக்கொண்டார்கள். 1917-ம் ஆண்டு ருஷியாவில் பொல்ஷிவிக்கட்சி ஏற்பட்டபோது சீனுவில் ருஷிய உரிமைகளையெல்லாம் விட்டுக்கொடுத்து விடுவதாய்க் கதறிற்று. ஆனால், இதன் நோக்கம் அம்பலமாக அதிககாலமாகவில்லை. 1950-ம் ஆண்டு சீன அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகச் சீனக்கம்யூனிஸ்தகட்சியை மஸ்கோ சிருஷ்டித்தது. 1927-ம் ஆண்டு சோவியற்மேற்பார்வையில் உழைத்துவந்த சீனக்கம்யூனிஸ்தர்கள் குவோ - மின் - டாங்கில் ஊடுருவமுயன்றனர். ஆனால், ஜெனறலிஸிமோ சியாங்கை - ஷேக் அவர்கள் விழித்திருந்து, தம்கட்சியிலிருந்து இந்த விரும்பத்தகாதபேர்களை விலக்கிக் கட்சியைக்காத்தார்.

"இரண்டாவது உலகமகாயுத்தம் முடிந்தபின் 1945-ம்ஆண்டின் யால்ற்ரு ஒப்பந்தப்படி சோவியற்ருஷியா வெளிமங்கோலியாவைப் பெயரளவில் சுதந்திரநாடாக்கி, நிர்வாகத்தைத் தன்கைக்குள் போட்டுக்கொண்டது. மேலும் டைரன்துறைமுகத்தைச் சர்வதேச துறைமுகமாக்கிற்று. போட்ஆர்தர் துறைமுகதளத்தையும் சுவீகரித்துக்கொண்டது. இந்தவசதிகள் போதாவென்று, கிழக்குச் சீன றெயில்வே, தெற்குமஞ்சூரிய றெயில்வே ஆகிய இரண்டின்நிர்வாகத்திலும் பங்குபெற்றது. சென்றவருட (1950) ஆரம்பத்தில், மாவ் - ஸே - டுங் சீனகம்யூனிஸ்த நிர்வாகத்தை அமைத்து ருஷியாவுடன் பல ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, சீனத்தேசியநலன்களை அந்நியருக்குக் காட்டிக்கொடுத்தார். இன்று சீனுவில் ருஷியஆதிக்கம் அநேகமாய்ப் பூர்த்தியாகிவிட்டது. பழைய ஸார்அரசர்கள் விட்ட இடத்தில் சோவியற்ருஷியர்கள் ஊன்றிக்கொண்டார்கள்.

"சீனுவுடன் ருஷியாவும், அமெரிக்காவும்கொண்டுள்ளஉறவுகளைச் சுருக்கமாகக் காட்டியிருக்கிறோம். இதிலிருந்து, சீனுவின் நண்பர் யார்? விரோதியார்? என்பது தெளிவாகும். எங்கள்நாட்டில் பகிரங்க சோவியற் ஆக்கிரமிப்பு நடந்துள்ள சோதனை மிக்க இத்தருணத்திலே அமெரிக்காவிலுள்ள சீனர்களானநாங்கள் எங்கள் தாய்நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கத் தயங்கமுடியாது. அமெரிக்காவிலுள்ள சீனர்கள் அனைவரையும் ஒன்றுசேர்த்து, உலகெங்குமுள்ள கம்யூனிஸ்த எதிர்ப்புசக்திகளுடன் கைகோர்த்துப் போராட்டம் தொடக்க நாங்கள் உறுதிகொண்டுள்ளோம். எங்கள்கோஷம் மூன்றே:

1. கம்யூனிஸத்தை எதிர்த்துச் சீனுவைவிடுவிப்பது.

2. சனநாயகம், சுதந்திரம் ஆகிய கொள்கைகளைக் காப்பது.

3. சீனுவுக்கும், அமெரிக்காவுக்குமிடையே நிரந்தர நல்லுறவை வளர்ப்பது.

---

தலைவில்லு, பெரியசந்தானுள் மாதாவின்

# பங்குனித் தபசுகாலத் திருநாள்

பங்குனிமாதம் 7-ந்திகதியும், 10-ந்திகதியும் நடைபெறும்.
கொடியேற்றம் பங்குனிமாதம் 1-ந்திகதி.
நோவனைகள் மாலை 7 மணிக்கு.
பொன்ரிபிக்கல்வேஸ்பர்ஸ் 6-ந்திகதி மாலை 7மணிக்கு.
பாடற்பூசை 7-ந்திகதி காலை 7-30 மணிக்கு.
9-ந்திகதி மாலை 7மணிக்கு பொன்ரிபிக்கல் வேஸ்பர்ஸ்
பாடற்பூசை 10-ந்திகதி 7-30 மணிக்கு.

குறிப்பு: சந்தானுள் மாதாகோவிலில் திருயாத்திரிகர்களுக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கும் வீடுகள் தேவையானவர்கள் முன்னதாகவே அட்மினிஸ்றேற்றர் சுவாமிகளுக்குஎழுதி ஒழுங்குசெய்துகொள்ளவேண்டியது.

கார்களும், பஸ் லொறிகளும் தங்குவதற்குக் கோவில்அருகாமையிலே இடம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

REV. FR. ARTHUR MARTIN FERNANDO
Administrator

---

தபசுகாலத்தின் முன்வரும்

## 1-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

(லூக். 18: 31—43)

அக்காலத்தில் யேசுநாதர் பன்னிருவரையும் தம்மிடத்தில் அழைத்து, அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இதோ, ஜெருசலேம்நகருக்குப் போகிறோம்; மனுமகனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டயாவும் நிறைவேறும். எப்படியெனில், அவர் புறச்சாதியாருக்குக் கையளிக்கப்பட்டுப் பரியாசம்பண்ணப்படுவார், சாட்டைகளால்அடிக்கப்படுவார், துப்பப்படுவார். அவரைச்சாட்டைகளால் அடித்தபின்பு, அவரைக் கொலைசெய்வார்கள். மீளவும் மூன்றாம்நாள் உயிர்ப்பார் என்றார். அவர்களோ இவைகளில் ஒன்றையுங்கண்டுபிடிக்கவில்லை. அவ்வார்த்தை அவர்களுக்கு மறைவாயிருந்ததால் சொல்லப்பட்டவைகளை அவர்கள்அறிந்துகொள்ளவில்லை. அப்பொழுது சம்பவித்ததாவது: அவர் எரிக்கோஊருக்குச் சமீபமாய்வருகையில், ஓர்குருடன் வழியோரத்தில் உட்கார்ந்து பிச்சைகேட்டுக்கொண்டிருந்தான். சனக்கும்பல் நடந்துபோகிறதை அவன் கேட்டு, இதேதென்று வினவ, நசரேத்தூராராகிய யேசுநாதர் கடந்துபோகிறாரென்று அவனுக்குச் சொல்லப்பட்டதும்: தாவீதின் குமாரனாகிய யேசுவே, என்பேரில் இரக்கமாயிருமென்றுசத்தமிட்டான். ஆனால், முந்திப்போகிறவர்கள் பேசாதேயென்று அவனைஅதட்டினார்கள். ஆனால், அவன் மேன்மேலும் கூவி: தாவீதின் குமாரனே, என்மேல் இரக்கமாயிரும்என; யேசுநாதர்நின்று அவனைத்தம்மிடத்தில் அழைத்துவரக் கட்டளையிட்டார். அவன் சமீபித்துவந்ததும், அவர்அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று கேட்க, அவனே: ஆண்டவரே, நான் பார்வையடையச் செய்யும் என; நீ பார்க்கக்கடவாயாக; உன்விசுவாசம் உன்னைச் சௌக்கியப்படுத்திற்றென்று யேசுநாதர் அவனுக்குச் சொன்னார். உடனே அவன் பார்வைஅடைந்ததுமன்றிச் சர்வேசுரனையுந்துதித்துஅவரைப் பின்சென்றான். சனமெல்லாம் அதைக்கண்டபோது சர்வேசுரனுக்குத்தோத்திரம் செலுத்தினார்கள்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## தேகவியோகம்

யாழ்ப்பாணப்பட்டணவாசரும், தலவாக்கெல்லைப் பகிரங்கவேலைப்பகுதிப் பிரதமகாரியஸ்தருமாகிய திரு. S. A. இராசேந்திரம்அவர்களின் மாமியாராகும் எலிசபேத் தம்புக்குட்டிஎன்பவ விருத்தாப்பியநோய்கண்டு அந்திம தேவதிரவியஅனுமானங்களை நல்லறிவுடன்பெற்று சென்றமாசம் 15-ந்திகதி படைத்தோன்காத்தில் தனது ஆன்மாவை ஒப்படைத்து மரணத்திரையில் மறையலானா. இவ தேவபக்தி, முதிர்ந்தஅனுபவம், ஊக்கம், பிறர்சிநேகம் முதலியசற்குணங்களில் சிறந்து விளங்கியிருந்தா. மறுநாட்சாயந்தரம் இவவின்பிரேதமானது இனசனர், சிநேகிதர், அயலவர் பலர்சூழ வெண்பரிபூட்டியவண்டியில் ஆசனக்கோவில் கொண்டுசெல்லப்பட, வீதியூடே வண. அன்ரன் இராசகாரியர் சுவாமியவர்கள் பாடகர்குழாமுடன்பாடிச்செல்ல, கோவிலில் அந்திம திருச்சடங்குகள் நடைபெற்றபின் சேமக்காலையில் பூமதானஞ்செய்யப்பட்டது. இவவின் பிரிவாற்றாது பிரலாபிக்கும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் யானும்அனுதாபப்படுகின்றேன்.

R. I. P. — கடிதர்

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சங். அல்போன்சா சகோதரி, அர்ச். அந்தோனியார், பரிசுத்த மடுச்செபமாலை மாதா இவர்களைக்குறித்துக் கேட்டமன்றாட்டுக்கள் அனுகூலமானதால் என் தாழ்மையான நன்றியறிந்த தோத்திரத்தை நேர்த்தியின்பிரகாரம் இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

Kalutara. ARUL.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின்அணைகடந்த கிருபையினாலும் அர்ச். அந்தோனியார், அர்ச். ஆரோக்கியநாதர் அவர்களின்இடையரு மனுப்பேசுதலினாலும் எனதுசகோதரிக்குஉண்டான மலேரியாக்காய்ச்சல் நீங்கிப் பூரணசுகம் அடைந்தா. மேற்படிஅர்ச்சியசிஷ்டர்களின் புதுமை பிரபல்யமடைய நேர்த்திப்படி பிரசுரிக்கின்றேன்.

யோ. சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளுவரும் ... ... பெண்களும்

தமிழ்நாட்டில்தோன்றி எண்ணற்ற காவியங்களை இயற்றிய புலவர்கள்அனைவரிலும் மாறுபட்டகருத்துள்ளவர் திருவள்ளுவர். அவருடையகுறள் உலகஅமைதிக்கும், ஒழுக்கம்நிறைந்த வாழ்க்கைக்கும் உறுதுணையாயது. வெறும்வார்த்தை அலங்காரங்களையும், வர்ணனைகளையும் அவர்குறளிற் காண முடியாது.

பெண்ணைப்பற்றிப்பாடிய எல்லாப் புலவர்களும் அவர்களின் கண்களைப் பற்றியும், கன்னங்களைப்பற்றியும், சிரிப்பின்அழகைப்பற்றியும், சிவந்த உதட்டைப்பற்றியும், இடையின் அளவைப் பற்றியும், எடுத்தடிவைக்கும் ஒயிலைப் பற்றியும் பக்கம்பக்கமாகப் பாடியிருக்கிறார்கள்.

ஆனால், வள்ளுவரோ பெண்களைப் பற்றிப் பாடியுள்ளார். ஆனால், பெண்களின் அங்கலட்சணங்களைப்பற்றியல்ல. அவர்கள் அறிவுகொண்டு நடக்கவேண்டிய அரியகருத்துக்களையே.

செந்தமிழ்இல்லங்கள் சிறப்புரிய இல்லாள்களினாலேதான் மதிப்படைந்தன; வீட்டின்அரசிகளான நங்கைகளாலேதான் நாட்டுஅரசு நலம்பல பெறமுடியும்என்னும் அரியகருத்துக்கள் அதில் மிளிர்கின்றன. புறத்தழகு எவ்வளவுதான்மிளிர்ந்தாலும் அகத்தழகுகுன்றியிருக்கும் பெண்ணினால் குடும்பத்துக்கேஇழுக்கு. பிறந்த வீட்டுக்கே பங்கம்.

கணவனுடைய சம்பளத்தை, வருமானத்தைக் கட்டுமட்டாகச் செலவு செய்து, கடன்சுமைக் கஷ்டமின்றி, மனச்சஞ்சலமில்லாது வாழ்க்கைநடத்துகிறவளே குடும்பத்துக்கு உகந்த பெண் என்றார்வள்ளுவர்.

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்
தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

மனைக்கு, வீட்டுக்கு உகந்தபெண் யாரென்றால், கணவனின் வரவைக் கணக்குவைத்துச் செலவு செய்பவள் தான்.

காலையில் நித்திரைப்பாயிலிருந்து எழுந்தவுடன் தன் கைபிடித்தகணவனின்பாதங்களைத் தொட்டுவணங்கும் பெண் மழைபெய்யென்று சொன்னவுடன் மழைபொழியுமாம். அவ்வளவு சக்தி கற்புக்கு உண்டுஎன்பதை வள்ளுவர்

"தெய்வந் தொழாஅள்
கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்ற குறளடிகளின்மூலம் தெளியவைக்கிறார்.

வள்ளுவர்கூறும்இத்தகையபெண்கள் எத்தனைபேர் இன்று இருக்கிறார்கள் நாட்டில். காலையில் "பெட்" காப்பியைப் படுத்தபடுக்கையில்குடித்துவிட்டு அதிகாலையில்வரும் தினசரியைப் புரட்டி மலிவுவிலையில் பொருள்கள் எங்கேவிற்கின்றன? புதியாகச் சேலைப் புடவைகள் எந்தக்கடைக்கு வந்திருக்கின்றனஎன்னும் புதினச்செய்திகளைப் படித்துவிட்டுப் புருஷன் படுக்கையை விட்டு எழுந்ததும், "இதோபாருங்கள் ......" என்று பத்திரிகையை நீட்டிக்கொண்டுநிற்கும் பத்தினித் தெய்வங்களைத்தான் இன்றுபார்க்கிறோம்.

பெண்களைப்பலர் சிறைக்கைதிகளைப்போல் நடத்துகிறார்கள். கற்புக் கெட்டுவிடக்கூடாதென்பதற்கு அவர்கள்எடுக்கும்நடவடிக்கை இந்தவகையில் பூட்டுப்போட்டுப் பூட்டுவதுதான். பெண்ணானவள் தன்கற்பை உணராதவரையில் — கற்பின்பெருமையை அறியாதவரையில் ஆடவர்கள் ஆயிரமாயிரம் கட்டுக்காவல்களைப்போட்டாலும் அத்தனையும் பயனற்றவைகளாகவே போய்விடும்என்று

"சிறைகாக்கும் காப்பெவன்
செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை"

என்ற இருஅடிகளின்மூலம் சொற்செட்டு, பொருட்செட்டாகச் சொல்லிவிட்டார்.

சிறைக்கைதிபோல் வைத்திருக்கும் காவல் "என்செய்யும்?" "என்னசெய்யப்போகிறது?" எவ்வளவு உறுதி அங்கேதொனிக்கிறது.

கற்பும், கணவனின் சொற்கேட்டு நடக்கும்பண்பும், வீட்டிற்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் பணிபுரியும் தன்மையும்வாய்ந்தபெண்ணை மனைவியாகஅடைந்தவனுக்கு எதிரிகள் முன்னிலையில் சிங்கஏறுகளைப்போல் நடக்கும்வீரம்உண்டாகுமாம். சிங்கஏறு போன்ற நடைஉண்டாவதற்கும் புகழைச்சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய "இல்"லாள் அவசியம்.

"புகழ் புரிந்தில் லில்லோர்க்
கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை"

பெண்ணிற்கு இவ்வளவு பெருமை தேடிக் கொடுக்கிறார் வள்ளுவர்.

மனைக்குகந்த பெண்யார்? தன்னைக் கற்பின்நின்று வழுவாது காப்பாற்றிக்கொண்டு, தன்னைக் கைப்பிடித்து மனைவியாகஏற்றுக்கொண்ட புருஷனுடையசொல்லைத் தேவவாக்காக எண்ணி வழுவாதுநடக்கும் சோர்வில்லாதவள், முகத்தைச் சுழிக்காதவள்தான் பெண். பெண்ணென்றுசொல்லத் தகுதியுடையவள்.

"தற்காத்துத் தற்கொண்டான்
பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

தமிழ்நாட்டுப்பெண்கள் வள்ளுவர் கண்ட பெண்களாக மாறிவிட்டார்களானால் நாடுஅடையும்பெருமைக்கு எல்லையுண்டோ? தனதுமொழி, கலை, கலாச்சாரம் சிறப்படைந்து, இழந்த தன்பெருமையை மீண்டும் பெறுதா என்ன?

— திருவள்ளுவர் நினைவுமலர்

## பல்லில் சொத்தை

(V. T. Fernando, L. D. Sc.)

சொத்தைப்பல் ஒருவித நாகரிக வியாதிஎன்பது வெகுகாலத்திற்கு முன்னிருந்தே பல்வைத்தியர்களுக்குத் தெரிந்தஉண்மை. நாகரிகப் பழக்க வழக்கங்கள் அதிகம் பரவாத மக்களிடையே இவ்வியாதி மிகவும்அபூர்வம். நமதுமுன்னோர்கள், பாட்டன் பூட்டன்முதலியோர் இவ்வியாதியை அறியமாட்டார்கள். அவர்களது பற்களிலே சொத்தைஎன்பதே கிடையாது.

தற்காலத்திலே இவ்வியாதி மிகவும் அதிகரித்திருக்கக்காரணம், மக்கள் சீனி சர்க்கரையையும், அரிசிச்சாதம், சொக்கிளேற், இனிப்புப்பண்டங்களையும் அதிகமாய்ப்புசிப்பதுதான். சர்க்கரைஎளிதில்புளிக்கக்கூடியதென்றும், பல்சொத்தையாதற்கு அதுவே மூலகாரணமென்றும் இப்போது நிச்சயமாகத் தெரியவந்துள்ளது.

நாம் உண்ணும் உணவுப் பொருட்களிலும், பானங்களிலுமுள்ள சர்க்கரை சீனியின் சிறியஅணுக்கள் பல் இடுக்குகளிலும், குழிகளிலும் தங்கிவிடுகின்றன. அதை வாயினுள் ஏற்கனவேஇருக்கும் கிருமிகள் விரைவில் புளிக்கச்செய்து காடிநீராகமாற்றுகின்றன. அந்தக்காடிநீர் உடனே பற்களைத்தாக்க ஆரம்பிக்கிறது.

இதற்காக இயற்கையானது வாயினுள் ஒருசிறந்த பாதுகாப்புச் சாதனத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறது. அது நம்எச்சிலேயாகும். அது காடிநீருடன் போரிட்டு அதைஅழிக்கிறது. சர்க்கரை சீனியைச் சிறிதளவு உண்போருக்கு எச்சில்ஒன்றே போதும். ஆனால் நாமோ அதிகமாகஉண்பதனால் வாயில் உண்டாகும் புளிப்பைக்கண்டிக்க அங்குள்ளஎச்சியினால் மாத்திரம் முடியாது.

காலையில் விழித்தெழுந்தவுடனும், இரவு படுக்கப்போகமுன்பும் பல்லைப் "பிறஷ்" எனப்படும் துடைப்பத்தால் சுத்தஞ்செய்வது அவசியமே. மேலும் உண்டபிறகும் பல்லைத்துலக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டு வந்தால் சொத்தைநோய் பரவாது.

ஆதலால், உணவு உண்டபின்னரும் பல்லைச் சுத்தஞ்செய்து வாய் கொப்புளிக்கவேண்டும். இந்த முறையை ஒழுங்காய்த்தினமும் அனுசரித்துவருவீர்களாயின் உங்கள்பற்களில் சொத்தைவிழுவதை வெகுவாய்க் குறைக்கலாம். முக்கியமாக இரவில்நித்திரைக்குப்போகுமுன் இனிப்புப் பதார்த்தங்கள் உண்ணக்கூடாது. அப்படி ஒருபோது உங்கள்பிள்ளைகள் சாப்பிட்டால் அவர்களது வாயை அலம்பியபின்னரே நித்திரைக்குப்போகும்படி செய்யுங்கள்.

பாலைதீவு

# அர்ச். அந்தோனியார் திருநாள்

# 25—2—51



இத்திருநாள் மகோற்சவம் மாசிமாதம் 20-ந்திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவாகும். 24-ந்திகதி சனிக்கிழமை அர்ச். அந்தோனியார்திருச்சுரூபம் வீதிகொண்டு சுற்றுப்பிரகாரம் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை காலை 4-30 மணிக்கும், 7 மணிக்கும் திவ்வியபூசைகள் நிறைவேறும். யாத்திரிகரின் ஞானகடமைகளைக் கவனிப்பதற்குப் பலகுருப்பிரசாதிகள் திருப்பதியிலே சமுகமாயிருப்பார்கள்

1-வது பெரியகடல் லைசென்சுள்ள மோட்டர்லான்சுகளுக்கு மாத்திரம் பாலைதீவுக்குப் பிரயாணஞ்செய்ய லைசென்ஸ் கொடுக்கப்படும்.

2-வது **வத்தைகளிலும், மோட்டர்லான்சுகளிலும் லைசென்ஸின்படி பிரயாணிகளை ஏற்றவேண்டும்.**

3-வது தண்ணீர் குறைவாயிருப்பதினால் கூடியளவு வத்தைக்காரரும், யாத்திரிகரும் தண்ணீர்கொண்டுபோகக் கடவார்கள்.

4-வது **செபமாலைக்கடைகளும், தேநீர்—உணவுக்கடைகளும் மாத்திரமே கட்டலாம்.**

5-வது கடைகட்ட விரும்புகிறவர்கள் கட்டளைச்சுவாமியாரிடம் உத்தரவு கேட்கவேண்டும். தீன்பண்டங்களைக் கண்ணாடிப்பெட்டிகளில் வைத்துக்காப்பாற்றவேண்டும்.

**இந்தக்கட்டளைக்கு அமையாதவர்களின் உணவுகள் இவ்வருடமுதல் பறிமுதலாக்கப்படும்.**

### துக்கப்பாடற்பூசை

பலவருடகாலமாகப் பாலைதீவுயாத்திரிகர்களுக்குப் பலவிதஉதவிகள் புரிந்துவந்து சென்ற 6-7-50-இல் காலஞ்சென்றவரான திரு. J. யோசேப்பு தம்புக்குட்டிமூப்பர் அவர்களின் ஆன்மஇளைப்பாற்றிக்காக இங்கு மாசிமாதம் 24-ந்திகதி சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு ஒர்துக்கப்பாடற்பூசை நிறைவேறும்.

கட்டளைக்குரு.

## சிலாவத்தைக் கடிதம்

காலநிலை—சென்றவாரம் நல்ல மழைபெய்தமையால் சற்றே உஷ்ணம் சாந்தியாயிருக்கின்றது. அதனால் மக்கள் அடைந்துள்ள மகிழ்ச்சி பெரிது.

வேளாண்மை—தகுந்தநேரத்தில் மழை பெய்து கொடாதகாரணத்தால் வாடிவதங்கிப்போயிருந்த நெற்பயிர்கள்எல்லாம் சென்றவாரத்திற்பெய்த பெருமழையாலே மலர்ச்சிகொள்ள, முற்றாகவேளாண்மை சேதமாகும்பக்குவத்திலிருந்து தப்பித்துக்கொண்டமையால் கமக்காரர் மகிழ்கின்றனர்.

கள்ளுத்தவறணை—சென்ற முப்பதுஆண்டுகட்குமேலாக இவ்வூரிலே இருந்துவந்த கள்ளுத்தவறணை சென்ற மாசம் 20-ந்திகதி நடைபெற்ற வாக்கெடுப்பாலே இவ்வருடநடுக்கூற்றில் மூடப்படவிருக்கின்றது. இவ்வூர்க் கிராமமுன்னேற்றச்சங்கத்தார் செய்த உபதேசங்களாலும், மற்றும் பெரியோர்களின் எடுத்துக்காட்டுகளாலும் தவறணையால்ஆகும் கெடுதிகளை உணர்ந்த ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் ஒருங்குதிரண்டுதவறணை வேண்டாம், வேண்டாம்என்று வீடுவீடாய்ச்சென்று பிரசாரஞ்செய்து திரிந்து நூற்றுக்குத் 95 வீதமான வாக்காளரின் சீட்டுகளால் வெற்றிமாலை சூடினர். இந்தவெற்றி மகா திருப்தியானது. இவ்விடத்திலிருந்து தவறணையை எடுக்கவேமுடியாதென்ற நிலைபரத்திலிருந்து, இவ்விதம் வெற்றி கிடைத்தது போற்றற்குரியதே.

மற்றுமிரு தவறணைகள்—இப்பகுதியில் அதேநாளில்நடந்த வாக்கெடுப்பால் வட்டுவாகல், பழமாத்தலன் என்னுமிடங்களிலுள்ள மற்றுமிருதவறணைகளும் மூடப்படவிருப்பது இங்குள்ளமக்கள் எல்லார்க்கும் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. இப்பெருவெற்றிக்குக் காரணமாயிருந்த கி. மு. சங்கத்தார்க்கும், மற்றும்பெரியோர்க்கும், கிராமத்தில்வசிக்கும் எல்லோர்க்கும் எமதுமனமார்ந்தநன்றி உரித்தாகுக. சுபம்.


கி. மு. ச. காரியதரிசி

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். றீத்தம்மாள், சங்.அல்போன்சா சகோதரி, அர்ச். அந்தோனியார், அர்ச். தெரேசம்மாள், அர்ச். அமலோற்பவ தாயாராகிய இவர்களிடம் கேட்டகாரியம் அனுகூலமானதால் என்நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைநான் காலங்கடத்திப் பிரசுரிப்பதால் என்னை மன்னிக்கும்படியாயும், இப்பொழுது எனக்குஏற்பட்டிருக்கும் ஆபத்திலிருந்து என்னைத்தற்காத்து வைக்கும்படியும் மன்றாடக் கேட்டுக்கொள்கிறேன்.

Kalutara. ARUL.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Osram
REGD. TRADE MARK

# ஒஸ்றம்

## அற்புதமான லாம்பு

கொடுக்கும் விலையிலும் கூடிய பலன் உள்ளது.

## வாக்கர் அன் கிறீக் லிமிட்டெட்.

கொழும்பு, கண்டி, வதுளை, டிக்கோயா, அப்புத்தளை, லிண்டுலா.

யாழ்ப்பாணம்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்ட

## கத்தோலிக்க பிரசுரங்கள்

| | |
|---|---|
| சின்னக்குறிப்பிடம் | 15 |
| பெரிய குறிப்பிடம் (அச்சில்) | |
| மெய்விவாகக் குறிப்பிடம் | 25 |
| உறுதிப்பூசுதற் குறிப்பிடம் | 05 |
| ஞானோபதேச பாடத்திட்டம் | 90 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் | 2-00 |
| திவ்விய பூசையின் சாதாரண செபங்கள் | 50 |
| மோட்சபாதை (அச்சில்) | |
| செபச் செண்டு | 75 |
| திவ்விய பூசைப்பலியின்பேரில் தியானங்கள் | 1-00 |
| பசாம் | 1-50 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) | 6-50 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமில்லாமல்) | 5-00 |
| சத்தியவேத ஞானக்கீர்த்தனங்கள் (அச்சில்) | |
| நவதின உற்சவம் | 75 |
| சற்பிரசாத அன்பன் | 30 |
| தரும அப்பம் | 1-00 |
| தேவமாதாவின் வணக்கமாதம் | 85 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் | 1-50 |
| மருதமடு யாத்திரைக் கைத்துணை (அச்சில்) | |
| பத்திமா மாதாவும் செபமாலையும் | 25 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பத்திமா) | 2-50 |
| மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் | 1-00 |
| ஞானவொடுக்கப் பிரசங்கங்கள் (அச்சில்) | |
| திவ்விய பூசை மகத்துவம் | 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் | 1-50 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) | 90 |
| ஆண்டவர் சரித்திரம் (Part II) | 90 |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி | 70 |
| பத்திச் சபைகள் | 20 |
| ஆத்தும தரிசனம் | 20 |
| சத்தியவேத தர்ப்பணம் (Part I) போதக காண்டம் | 2-50 |
| மன்னார் வேதசாட்சிகள் | 1-00 |
| தமிழரின் பூர்வ சரித்திரம் | 50 |
| ஹெலேனு அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம் | 35 |
| அர்ச். லூயி மேரி கிறிஞ்ஞோன் சீவிய சரித்திரம் | 40 |
| நானே குற்றவாளி | 1-00 |

### பாத்திமாமாதாவின் புதுமைகள்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

களான அவன்பெற்றோர் செலவழிக்கவேண்டியதெல்லாம் செலவழித்தும், செய்யவேண்டியசிகிட்சையெல்லாம் செய்தும் மனம்அலுத்தவர்களாய் டக்றர்மாரின் ஆலோசனையின்பேரிலே இனி இதில்செலவழிப்பதில் ஓர் பிரயோசனமுமில்லையென்று முடிவுகட்டிவிட்டனர். அதன்மேல் பையன் எழுந்து நடக்க இயக்கமற்ற சப்பாணியாகவே வருடங்களைக்கழித்தான். அவ்வூருக்கு மாதா தரிசனை அளித்த பொழுது அவர்முன்பாகக் கொண்டுபோய் வளர்த்தப்பட்ட பிணியாளர்களில் இப்பையனும், கண்வருத்தம் கண்டு வருந்தி இருகண்களும் பார்வையிழந்த ஓர் இந்துசமய மனுஷியும் அடங்குவர். மாதாவின் சமுகத்திலே இவர்கள் எல்லோரும் தேவநற்கருணைகொண்டு ஆசீர்வதித்தானதும் ஓ! என்ன அற்புதம்! ஆனந்தக்கண்ணீர் சிந்தாமல் இந்த ஆச்சரியத்தை என்னென்றுசொல்வேன்?

சப்பாணியாயிருந்த பையன் எழுந்து சட்டென ஓர் மான்குட்டிபோல் திடீரெனத் துள்ளிக்குதித்து ஓடத்தொடங்கினான். அவன் பெற்றோர் உடனே அவனைப்பின்தொடர்ந்து ஓடிச்சென்றனர். ஓடிச்சென்று அவனை வாரியணைத்து முத்தமிட்டனர். டக்றர்மாரும் புதுமைதான் என்றனர். நிற்க, மனுஷிபாடென்ன? இதோ கைலாகுகொடுத்துக் கூட்டிவந்தோர்களைக் கிட்டவும்விடாமல், பிடிக்கவும்விடாமல்தன்பாட்டில் எழுந்து தன் உள்ளக்கிளர்ச்சியை அடக்கமாட்டாமல் மாதாபாதத்தில் குப்புறவிழுந்து சரணடைகின்றாள். மாதாவின் ஞானக்குமாரத்தியாகத் தன்னை ஏற்குமாறு மன்றாடுகிறாள். என்ன ஆச்சரியம்! இப்பொழுது அந்தச்சீனக்குடும்பம் முழுவதும், இந்த மனுஷியின் குடும்பமும் நம் திருவேதத்தில் சேர்வதற்கு ஆயத்தம்செய்வதாக அறிகின்றேன். மூன்றாவதுநவம் என்னவெனில், மனிதசஞ்சாரமற்ற ஓர் காட்டுமார்க்கமாய் மாதா பவனிபோகையில், முருக்கம்பூப் போன்ற சிவந்தசொண்டையுடைய — வெண்பனிபோன்ற இரு வெள்ளை மாடப்புறாக்கள் ஆகாயத்தைஊடுருவிவந்துமாதாவின் திருப்பாத இருமருங்கும் உட்கார்ந்தன. சனங்கள் எப்படித்தான் விரட்டியும், கலைத்தும் அவைகள் இருந்த இடம் விட்டு அசைந்தபாடில்லை. வெகுதூரம் போனபின் சுரூபத்தோடுசென்ற குருமாரில் முகாமை வகித்த குருவானவர் அவைகள் இரண்டையும் ஆசீர்வதித்துப் பறக்கும்படி சைக்கினைகாட்டியதும் மேலெழுந்து மும்முறைவட்டமிட்டபின் ஆகாயத்தைஊடுருவிக் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டன.

சுபம்!

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சென்றவருஷம் நடைபெற்ற பரீட்சைக்கு ஆயத்தஞ்செய்துகொண்டிருந்த எனதுமகனுக்கு ஏற்பட்டவருத்தமானது எம்மவர்யாவருக்கும் பெருங்கவலையை உண்டுபண்ணியது. அர்ச். பொம்பே மாதாவினதும், அர்ச். அந்தோனியாரினதும் அருளையும் கிருபையையும் மிக்க தபத்துடன்இரந்துமன்றாடினேன். மகனை வருத்தத்துடன் பரீட்சைக்கு அனுப்பியிருந்தேன். அவர்களின் இரக்கத்தால் சித்தியடைந்துவிட்டார் யேசுவின்திரு இருதயத்துக்கு ஸ்தோத்திரமும், அர்ச். பொம்பேமாதாவுக்கும், அர்ச்.அந்தோனியாருக்கும் நன்றியும் கூறுகின்றேன். எனதுநேர்த்திப்படி இதைப்பத்திரிகையில் பரப்புகின்றேன்.

சூராவத்தை இ. எலிசபேத்

—குழந்தையேசுவின் அர்ச். தெரேசம்மாளின் சகோதரிகளிலே இன்னும் சீவந்தராய்இருப்பாருள் ஒருவரான 89 வயசுடைய சங். ஆக்னேஸ் தாயார் சமீபத்தில் தனக்குண்டான நோயின் அபாயநிலை நீங்கிக் குணப்பட்டிருக்கிறாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. அவளின் மற்றோர் சகோதரியான சங். ஜெனெவியெவ் கன்னிகாஸ்திரீயும் 81 வயசுடையவராய் லீசியேயின்கார்மேல்மடத்திற்தான் இருந்துவருகின்றார்.

— பெத்தலெகேம்நகருக்குச் சமீபமான பெயிற் சாவர் எனுமிடத்திலே மத்தியகிழக்குநாடுகளில் முதலாவதாகப் பாத்திமாநாயகியின் திருசேத்திரம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதனைக்கட்டுவதற்கென்று அமெரிக்க ஐக்கியதேசத்திலே சமீப கிழக்குநாடுகளின் சேமநல்வாழ்வுக்கான கத்தோலிக்கசங்கத்தைச்சேர்ந்த ஐயாயிரம் உபகாரிகள்பணம்உபகரித்திருக்கின்றார்கள்.

### புறக்கோட்டைத் தவறணைகள்

கொழும்பிலே புறக்கோட்டையிலுள்ள மூன்று சாராயத்தவறணைகளையும், ஐந்து கள்ளுத்தவறணைகளையும், எட்டுக்குடிவகைச் சாய்ப்புகளையும் நீக்குவிக்கும் நோக்கமாகச் சென்ற 27-ந்திகதி சனிக்கிழமை சனசம்மதிச் சீட்டுப் போடப்பட்டு அதிலே மதுவிலக்குஅபிமானிகள் வெற்றியடைந்திருக்கிறார்கள். மொத்தமாகப் போடப்பட்ட 811 சீட்டுகளிலே 764 சீட்டுகள் அவைகளின் நீக்கத்துக்காகப் போடப்பட்டனவாகும். அங்கு சம்மதி கொடுக்கவேண்டியவர்கள் தொகை 1,491. தவறணைகளை நீக்க நூற்றுக்கு 51 வீதமானோருக்குமேல் சீட்டுப் போடவேண்டியவர்கள் 764 பேர். அதாவது நூற்றுக்கு 51·24 வீதமானோர் சீட்டுப்போட்டமையாலே, அதாவது மூன்றுசீட்டுகள் அதிகப்படியாகப் போடப்பட்டமையாலே அவைகள் நீக்கப்படவேண்டுமெனத் தீர்மானமாயிற்று. புறக்கோட்டையிலே மதுவிலக்குவிஷயமாய் மதுவிலக்கு அபிமானிகள்செய்த ஐந்தாவது முயற்சி இதுவாகும். அதனால் அவர்கள் அடைந்திருக்கும் மகிழ்ச்சிபெரிதாகும்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, 1 February 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org